# சிரித்திரன்

நவம்பர் 1981



சிரித்திரன்சிந்தனை

மண்ணை அபிவிருத்தி
செய்வதற்கேமாவலித்திட்டம்.
ஆனல் கடல் அரிப்பு மண்ணை
ஏப்பமிட்டுக்கொண்டிருக்கிறது
மா சமுத்திரம் மாவலியையே
ஏப்பமிட்டிடுமோ என்று
ஏங்கவேண்டியிருக்கிறது !

வியாழசுகம்




25

வெள்ளைக்காரன் விஞ்ஞானத்தால் முன்னேற்றம் காண்கின்றுன், நம்ம தமிழன் சும்மா இருந்து வியாழன் மாற்றத்தால் முன்னேற்றம் காணப்பார்க்கிறுன்—

**A Literary Humour Monthly**

விலை ரூபா 2-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகளுக்கோ இரட்டிப்பான தித்திப்பு

கண்நிறைந்த கணவனைத் தேர்ந்தெடுத்தது

ஒன்று-

கண்கவர் நகைகளைத் தேர்ந்தெடுத்தது

மற்றென்று



மாற்றுக் குறையாத மனோரம்மியமான

தங்க நகைகளுக்கு

என்றும் நாடுங்கள்

# சுஜாதா ஜுவெல்லர்ஸ்

## SUJATHA JEWELLERS

Prop : K. யோகேஸ்வரன்

214 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
நகை: 18
சுவை: 11
கார்த்திகை 1981

# அஞ்சலியல்ல...
# ஆராதனை

ஒரு—
வரனம்பாடியின்
கானம்அடங்கிட...
கவிதாவானில்
காரிருள் சூழ்ந்தது...
கண்ணீர் துளிர்க்கும்
மௌனத்துயரில்
எண்ணம் குளிக்க
எங்குமே சோகம்...

★

நீ, ஒருவன்
கண்ணனுக்கு
தாசனுனாய்...
ஆனால்—
உலகெங்கும்
உனக்குத்தான்
எத்தனை தாசர்கள்?

★

நீ—
ஞானக்கிறுக்கில்
நவின்றவை யாவும்
கானம்பொழியும்
கவிதைப் பறவைகள்
போதையிலே...
உன் புலம்பலும்கூட
போதையையூட்டும்
கவித்தேன் துளிகளே...

★

வெறும்சொற்களுக்கு
கவிதா மோட்சம்
வழங்கியவன்
—நீ

★

உன் ஆத்மாவுள்
சப்தஸ்வரங்களே
சஞ்சாரம் செய்திருக்கும்
அதனால் தான்—
நீ—சப்தித்த எல்லாமே
சாகித்யங்களாகின...


★

உன்ஒவ்வொரு அடியும்
ராகமாயும்...
தாளமாயும்...
பதிந்ததால்தான்...
உன்கவிஅடிகள்
ஒவ்வொன்றும்
தாள-லயம்
தவறு தொலித்தன...

★

வெள்ளித்திரையில்
தமிழ்ப்'பண்பாடு'
படும்பாட்டால்
தலைகுனிந்த
போதெல்லாம்
உன்—
தமிழ்ப் பண்-பாட்டால்
செவிகுளிரத்—
தலைநிமிர்ந்தோம்
நாம்.

★



நீயே ஒப்புக்கொண்ட
உன்வாழ்வின்
அபஸ்வரங்கள்
அனைத்தையும்
உன் கவிதைகளே
மன்னிக்கவைத்தன

★

இன்று
வார்த்தைகள் இங்கே
உன்—
வரவினைநாடி
காவியமாகத்
தவமிருக்கையிலே...
நீ—
வார்த்தையை மறந்து
மௌனதவத்தில்...
உறங்கியசெய்தி
எமை—
உறையுவைத்ததுவே...

★

ஒரு—
மகாகவியின்
நூற்றுண்டை
மகோனந்தமாம்
கொண்டாட
மனம் துடிக்கும்
வேளையிலே,
தேமதுர-கவியரசே!
உனைஇழந்த
நீள் துயரம்
நெஞ்சில்கனக்கும்
நினைவுமயக்கும்

★

உன் ஆத்மாவுக்கு
அஞ்சலி செலுத்த
வார்த்தைகளை
தேடுகிறோம்...
தென்படவில்லை...
அவைகள்—
உனக்குஅஞ்சலி
செய்ய—
வரிசையாக
வந்துவிட்டனவோ?

★


உன்வார்த்தையில்
சொல்வதானால்
நீ—
'கிருஷ்ணார்ப்பணம்'
ஆகிவிட்டாய்...
அனந்த சயனத்தில்
ஆழ்ந்துவிட்ட உனக்கு
எம்...
அஞ்சலிகளல்ல...
ஆராதனைகளே
சமர்ப்பணம்.

சிரித்திரன்

# 18


ஆண்டுப்

பவனியில்




மாடும் வண்டியும்










தலைகாக்கும் குடை விரிப்பது
தலைபோகும் விஷயமா
யிருக்கே!




பந்து சொன்னது: உரலுக்கு
ஒருபக்கம் இடி மிருதங்
கத்திற்கு இரண்டு பக்க
மும் அடி, எனக்கோ
எல்லாப்பக்கமும் உதை.



சார்.... முருங்கைக்காய் நாகரீகமாகக் கொண்டு
போவதற்கு முருங்கைக்காய் 'கேஸ்' சார்



✻ ஏன் சுமைதாங்கியாய் நிற்கிறாய்

■ இந்தப்பெரியவர் நம்ம பேப்பரைஓசியில்
படிக்கிறார் வாங்கியிட்டுப்போக நிற்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனோரம்யம்

மேகலை

# வானொலிக் கலைஞர்களின் வாணிவிழா

இவ்வாண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனக் கலைஞர்களின் வாணிவிழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

மண்டபத்தின் உள்ளேயும் வெளியேயும் ஆயிரக்கணக் கானோர் திரண்டு நின்றனர்.

நுழைவாயில் சீட்டு கிடைக்காது பல திரும்பநேரிட் டது. இத்தகைய பரபரப்பான சூழ்நிலையில் விழா ஆரம்பமானது.

குலபூஷண குலசேகரம்பிள்ளையின் சகலகலாவல்லிமாலை ராகமாலிகையாக இசைக்க விழாவின் ஆரம்பமே களை கட்ட ஆரம்பித்தது.

அடுத்து நடைபெற்ற நாகேஸ்வரி பிரம்மானந்தாவின் கச்சேரி, நிர்வாகஸ்தர்களின் கவலையீனம் - அவசரத் தன்மை ஆகியவற்ருலும் - ஒலியமைப்பு ஒத்துழைக்காத காரணத்தாலும் எதிர்பார்த்த அளவு சுவைக்காதது ரசிகர்களுக்கு ஏமாற்றமே.

தம்புரா சுருதி சேர்க்கக்கூட அவகாசம் கொடுக்காது அவசரப்படுத்தினுல் என்னசெய்வது?

நடனநங்கையரின் ஒன்றிணைந்த தாள - பாவமிக்க வெளிப்பாடும், ஒயிலும் மிக்க 'தீபநடனம்' அடுத்த நிகழ்ச்சியாகி கச்சிதமாக மெருகூட்டியது.

திருமதி திரிபுரசுந்தரி யோகநாதனின் தயாரிப்பு என்ருல் கேட்கவாவேண்டும்.

வானொலி வாத்தியக்கோஷ்டியின் அபாரமான வாசிப்பு ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டை பெற்றது. நிகழ்ச் சியின் தயாரிப்பாளர் ரி. வி. பிச்சையப்பாவுக்கு ஒரு சபாஷ்.

திருமதி ஞானமணி செல்லையா தயாரித்தளித்த கும்மி நடனம் பாவப் பொலிவுடன் ஆடப்பட்டது. எல்லாக் குழந்தைகளும் ஒரே அளவினராக இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் இதற்கான பாடல்களைப் பாடியவர் திலகநாயகம் போல் அவர்கள்.

பக்கப்பாட்டில் அவருக்குநிகர் அவரேதான்.

அடுத்து ரஸிகர்களின் அமோக கைதட்டலைப் பெற்ற தாளவாத்தியக் கச்சேரியில் ஓர்புதிய உத்தி கையா ளப்பட்டது. மேற்கத்தைய தாளவாத்தியமான Drum எமது தாளவாத்தியங்களுடன் இணைத்து மெய்மறக்க வைத்தது. செல்வன் நேசம் தியாகராசா அற்புதமான லயப்பிடிப்புடன் அநாயாசமாக வாசித்தது எல்லார் கவனத்தையும் ஈர்த்தார்.


செல்வி சாந்தா பொன்னுத்துரையால் தயாரிக்கப்பட்ட 'ஓவியனின் கனவு' நாட்டிய நாடகம் ரசிகர்களை கனவு லகிற்கே அழைத்துச் சென்றது. வீரமணிஐயரின் பாடல் களுக்கு, சாந்தாவின் நட்டுவாங்கம் சிறப்பாக அமைய நர்த்தகிகள் அற்புதமாக ஆடினர். பாட்டு சோபிக்காத தேனே?

அடுத்து இசையமைப்பாளர் R. முத்துசாமி தயாரித் தளித்த மெல்லிசை நிகழ்ச்சி தொழில்நுட்ப கலைஞர் களின் பிசகுகளால் சோபிக்கவில்லை. இருப்பினும் வாத்தியக்கலைஞர்களும், பாடகர்களும் தத்தம் பங் கினை திறமையாகவே செய்தனர்.

நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல அமைந்த கலைஞர் வேல் ஆனந்தனின் தாண்டவம் — அவருக்கே உரிய 'தடல்புடலு'டன் அமைந்திருந்தது.

தமிழ்பகுதி (வானொலி) உத்தியோகஸ்தர்கள் தங்களின் உறவினர்களை தாராளமாக இலவசமாக நுழைய விட் டதால் பலர் நிகழ்ச்சிக்கான நுழைவாயில் சீட்டுக் கிடையாது வீடு திரும்பியதும், பொறியியலாளர் கிருஷ் ணனை குனிந்துநின்று பாடவைத்ததும், வாணிக்கு விழா நுழைவாயில் சீட்டுக்கு பணம் வைத்ததும் சிலர் மனதை சலிப்படையச்செய்தது.

—என்னவானுலும் இவ்வினிய நிகழ்ச்சிகளை தயாரித் தளித்ததில் பங்குகொண்ட அனைவருக்கும் யாழ்-மக்க ளுடன் நாமும் நன்றி சொல்லுகின்ருேம்.



ஆசிரியர்: நீ ஏன் நேற்றுப்பாடசாலைக்கு வரவில்லை?

மாணவன்: வியாழன் மாற்றம் அப்பா போகவேண்டா மென்றவர்.

நாகபூஷணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலன் குறைந்தும் புலமை மிக்கோர்

யாழ்ப்பாணம்.

இசையோடிணைந்த வரலாற்றையுடைய மண்.

அந்தகக் கவிராயரான 'யாழ்ப்பாடி' தன் கலாவிற்பன்னத்தால் இசை மழைபொழிந்து, மணற்றிடராக இருந்த இம்மண்ணுக்கு உரியவனுகும் பரிசிலைப்பெற்று —'யாழ்ப்பாணம்' என்னும் கலைத்துவமான பெயரை பெறக்காரணமாக இருந்தது நாமறிந்த வரலாறே.

இவ்வாண்டை வலது குறைந்தோர் ஆண்டாக உலகம் கொண்டாடுகின்றது.

எல்லா நாடுகளிலும் 'யாழ்ப்பாணம்' இவ்வாண்டை மிகவிமரிசையாக கொண்டாடவேண்டிய கடமைப்பாடு உடையதாக இருக்கின்றது.

''அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது—அதிலும் கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது" என ஔவை மூதாட்டி அன்று கூறியபோதிலும், இன்றைய உலகில் அங்கஹீனர்கள் பல்வேறு துறைகளிலும், வியத்தகு சாதனைகளையும், அற்புதமான கலைப்படைப்புகளையும் உருவாக்கியுள்ளனர்.

—மாவீரன் நெப்போலியனையே போரில் தோற்கடித்த தளபதி நெல்சன் ஒருகண் பார்வையற்றவர். சமீபத்தில் மறைந்த இஸ்ரேலின் இரும்பு மனிதனை 'மோஷே தயான்' கூட ஒருகண் பார்வையற்றவரே. 'இழந்த சொர்க்கம்' 'மீண்டசொர்க்கம்' ஆகிய காலத்தால் அழியாத கவிப்படைப்புக்களின் சிருஷ்டிகர்த்தா 'மில்டனும் உலகப்புகழ்பெற்ற கிரேக்க இதிகாசங்களான 'இலியட்'—'ஓடிசி' ஆகிய இரண்டையும் பாடிய 'ஹோமரும்' பார்வையை முழுதாக இழந்தவர்களே... மேற்கத்தைய சங்கீதத்தின் பிதாவான 'பீ தோவன் செவிப்புலன் குன்றியவர் எனக்கூறப்படுகிறது-ஹெலன் ஹெல்லர் பற்றி சொல்லவே தேவையில்லை. மேல்நாடுகளில் இன்று கைகால் வழங்காதவர்களால் பிரமிப்பூட்டும் கலைப்படைப்புக்கள் சிருஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வாயாலும், காலாலும் தூரிகைபிடித்து ஓவியங்களை வரைகின்றோர் சங்கம் (Mouth and Foot Painter's Association) அங்கு மேன்மைமிகு சாதனைகளை செய்து கொண்டிருக்கின்றது.

'பழங்களும் பூக்களும்', 'தாராத்குளம்', 'மூடப்பட்ட பாலம்', 'ஸ்பானியக் கிராமம்', ஆகிய உலகப் புகழ் பெற்ற ஓவியங்கள் இவர்களாலேயே வரையப்பட்டன. உலகப்புகழ்பெற்ற சுழல்பந்து வீச்சு கிரிக்கெட் வீரரான இந்தியாவின் B. S சந்திரசேகர் 'போலியோ'நோய் காரணமாக ஒரு கை-கால் செயற்பாட்டை இழந்தவர் தான் இன்று இந்தியாவில் புகழ் பெற்றுவரும் வயலின் வித்வானுகிய திரு- சந்திரசேகரன் என்பவர் பார்வையற்றவரே.

இப்படி எத்தனையோ பேர்கள்—

இந்த ஆண்டில்தான் யாழ்-வளாகத்தில் கட்புலன் அற்ற ஒருவர் பட்டதாரிப் பேறுபெற்றதும் - வேறொரு பெண் பணி சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதும் - நம்மண்ணுக்கு பெருமை தரும் செய்திகளாகும்.

அதேசமயம் ஊனமுற்றோர்க்கு உதவுவதில் பெரும் தொண்டாற்றி வரும் சமூகசேவை நிறுவனங்களை பாராட்டுதல் அவசியமானதாகும்.

★

இதேவேளையில்—

தமிழ்த்திரைப்படங்களில் - அங்கம் பெருத்தவர்கள், மெலிந்ததர்கள், ஆகியோரின் அங்கக்குறைபாடுகளை வைத்து நகைச்சுவை என்றபெயரில், கோமாளிக் கூத்தாட வைப்பதும் ரசிகர்களில் இருக்கும் அத்தகையோரின் மனம் புண்படும்படி கிண்டல் செய்வதும் இப்போது மிகவும் சாதாரணமாகிவிட்டது. சர்க்கஸ்களில் குள்ளமானவர்கள் கோமாளிகளாக்கப் படுகிறார்கள். —இது நம் நகைச்சுவையின் பரிதாபநிலையை — அவலநிலையை காட்டுகிறது.

அங்கவீனர்களை கேலிப்படுத்துவது நம் திரைப்படக்கதாசிரியர்கள் இயக்குநர்களின் அறிவீனத்தையே காட்டுகிறது.


—நாம் குறைவற்ற—பூரணத்தன்மை உத்தரவாதமானதல்ல விபத்து, நரை - திரை - மூப்பு நம்மைப்பார்த்து நகைப்பது தெரியவில்லையா?

கூன்விழுந்து - நரை திரண்டு, பார்வை மங்கி, நடை தளர்ந்து, பாயோடு ஒன்றி, புலனறிவிழந்து, வெறும் ஜடமாகி...

அதனை உங்களால் கற்பனைசெய்து பார்க்க முடிகிறதா?

அது நகைச்சுவையாகவா இருக்கிறது?

அங்கவீனர்கள் அகில உலகிலும் ஆற்றல்மிகு அற்புத சாதனைகளை ஆற்றிவரும் இவ்வேளையில் மேற்குறிப்பிட்ட வேதனைதரும் செயல்கள் மூலம் அவர்கள் தங்கள் பகுத்தறிவின்மையே பகிரங்கப் படுத்தி, அங்க வீனர்களிலும் பரிதாபத்திற்குரிய அறிவீனர்களாகி விடுகிறார்கள்—இதனுல் நாங்கள் புலனிருந்தும் புலமையற்றவர்கள் -அவர்கள் புலன் குறைந்தும் புலமையுடையோர் என்ற கௌரவத்தைப் பெறுகிறார்கள். □



சிங்கணேஸ்வரன் யாழ்ப்பாணம்

● அந்நிய நாட்டிலிருந்து வரும் பணத்திற்கு என்ன ஆகின்றது?

□ ஒருபகுதி மதுவில் மறைகின்றது. ஒருபகுதி சீதனத்தில் சிதைகின்றது. ஒருபகுதி வங்கியில் விறைத்திருக்கின்றது. தொழில் வளம் செழிக்கச் செலவிடுவதற்கு எதுவுமில்லை.

அருளானந்தம் வட்டக்கச்சி

● அகஸ்திய மாமுனி மீண்டும் பிறந்தால்...?

□ அந்த முனி மினி பஸ்ஸில் தலை குனியாது பயணம் செய்வார்.

தமிழமிர்தன் திருநெல்வேலி யாழ்ப்பாணம்

● கண்ணதாசன் கவிதைகள் பற்றி உமது கருத்து?

□ பேனா அவர் கையில் ஒரு தூரிகையென்பதா...? புல்லாங்குழல் என்பதா... மந்திரக் கோல்லென்பதா...? எப்படிச் சொல்வதென்று மயக்கமாக இருக்கிறது.

வைதேகி பண்டாரவளை

● மனிதன் இன்று குறுக்குவழியில் போய்க்கொண்டிருக்கிறான்... அப்படித்தானே?

□ ஆம், குறுக்கு வழியால் பரீட்சையில் சித்தியடைய முயலுகிறான், குறுக்கு வழியால் பணம் சம்பாதிக்க முயலுகிறான்... குறுக்கு வழியால் மோட்சமும் போக விரும்புவான்...

அரசானந்தன் வல்வெட்டித்துறை

● அந்நிய நாடு போனவர்கள் தாயை -தாய்நாட்டை மறப்பார்களா?

□ தேன் சேகரிக்கப்போன ஈக்கள் கூட்டை மறப்பதில்லை, 'ஈ' இருதயம் கொண்டவர்களும் அப்படித்தான் மறவாது வருவார்கள். ஈயென்றவாயர்களா யிருந்தால் மறப்பார்கள்.

இ. முருகானந்தன் முள்ளியவளை

● மதுவெறிக்கும், மதவெறிக்கும் உள்ளவேறுபாடென்ன?

□ மதவெறி, மதுவெறியிலும் மகா பயங்கரமானது. உலக வரலாறு மதத்திற்காக இறந்தவர்களின் இரத்தத்தால் தான்எழுதப்பட்டிருக்கிறது.



அப்துல்காதர் கல்முனை

● பொருளாசை உள்ளவனுக்கு கலைப்பற்று இருக்குமா?

□ அவனுக்கு பூபாளம் கசக்கும் தங்கப்பாளம் இனிக்கும்.

சிவபாதராஜா நல்லூர்

● கவிதை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

□ புடம்போட்ட தங்கமான எண்ணத்தால் வார்க்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட கற்களான சொற்களால் பதிக்கப்பட்ட பதக்கமாக இருக்கவேண்டும்.

சிவதேவி முள்ளியவளை

● நாம் எந்தக்காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்?

□ மந்திரம் ஜெபிக்கும் காலகட்டம்போய் மந்திராலோசனை நடத்தும் காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஸ்ரீ. தாரிணி மட்டக்களப்பு

● அமெரிக்காவிற்கும், ரஷ்யாவிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

□ அமெரிக்காவில் 'டொலரை'க் காணலாம். ரஷ்யாவில் 'தோழரை'க் காணலாம்.

சி. மலர்நாதன் திருகோணமலை

● மனிதன் படைப்பிற்கும் கடவுளின் படைப்பிற்கும் வித்தியாசம் என்ன மகுடியாரே?

□ மனிதன் படைத்த இயந்திரங்கள் தண்ணீரால் இயங்காது. கடவுள் படைத்த மனித யந்திரம் தண்ணீரில்லாமல் இயங்காது.

எ. எம்பிரான் தெல்லிப்பளை

● மனைவி எப்படிப்பட்டவளாக இருக்கவேண்டும்?

□ சிரிக்கும்போது ரதியாகவும், கொடுக்கும்போது லக்ஷ்மியாகவும், பேசும் போது சரஸ்வதியாகவும் இருக்க வேண்டும் கோபம்வரும் போது 'காளி'யாக மட்டும் இருக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. கண்ணபிரான் ஊரெழு

● பூமணம்—திருமணம் இரண்டையும் ஒப்பிடுங்கள் பார்க்கலாம்.

□ பூமணம் குளவியைக் கவரும் திருமணம் குழவியைப் பெறும்.

த. கண்ணன் காத்தான்குடி

● முயற்சி திருவினையாக்குமா?

□ நீதித்தராசு ஒருபக்கம் சாயும் நாட்டில் முயற்சி 'தெருவினை'யாக்கும்.

சு. ராஜகுலேந்திரன் அக்கரைப்பற்று

● உலகில் சமாதானம் இல்லாவிட்டால்...

□ இரத்தானம் நிறையத் தேவைப்படும்.

க. பரதன் நல்லூர்

● கடவுள் செய்தபெரும் தவறு என்ன?

□ மனிதனைப் பகுத்தறிவுடன் படைத்தது. பகுத்தறிவை மறந்து இருப்பதற்காகவல்லவா போதைவஸ்துக்களை உட்கொள்ளுகின்றான்.

செல்வி உஷா ஏகாம்பரம் நல்லூர்

● அமெரிக்கா ஒரு விசித்திரமான நாடு என்கிறேன் நான் உமது கருத்து என்ன?

□ ஆம் - ஆத்மீக ஞானிகளை இறக்குமதி செய்கின்றது. ஆயுதங்களை ஏற்றுமதி செய்கின்றது.

எ. கந்தவனம் தெல்லிப்பளை

● மரத்தையும், மனிதனையும் ஒப்பிடுங்கள்.

□ மனிதன் பட்டை அணிகின்றான் தன் அந்தஸ்தைக் காட்டுவதற்கு. மரம் 'பட்டை' அணிந்துள்ளது தன்னைக் காப்பாற்றுவதற்கு

த. சிவபரன் மல்லாகம்

● சிறைச்சாலையிலும் இன்று இடநெருக்கடியாமே?

□ பாடசாலைகள் சிறைச்சாலையைநிரம்பும் தொண்டையா செய்கின்றார்கள் எனச்சிந்திக்க வேண்டிஇருக்கிறது.

செல்வன் த. குமாரவேல் புத்தூர்

● வீணைக்கும் துப்பாக்கிக்கும் உள்ள வேறுபாடு என்ன?

□ வீணையை அழுத்தினால் தேவகானம் வரும் துப்பாக்கியை அழுத்தினால் காலதேவன் வருவான்.

த. கனகசுந்தரம் சாவகச்சேரி

● வாலிபர்களுக்கு நீர்கூறும் அறிவுரை என்ன?

□ மன்மத பாணமும், மாது பாணமும் ஆபத்தானவை

ம. செல்வராசா கோப்பாய்

● மனிதனை புரிந்து கொள்ள முடியவில்லையே...?

□ ஆமாம் தம்பி தங்கத்திலும் மதிப்புக் குறைந்தபணத்தை வங்கியில் போட்டு பாதுகாக்கிறான். தங்கத்திலும்மேலான நேரத்தை வீணாக விரயம் செய்கின்றான்.

ம. மதிவதனன் மானிப்பாய்

● பேச்சாளர்கள் எத்தனை வகைப்படுவர்?

□ மூன்று வகையினர். மேற்கோள் காட்டாமல் பேசும் அறிவுடையோர், மேற்கோள் காட்டிப்பேசும் அறிவுடையோர், பிழையான மேற்கோள் காட்டிப்பேசும் அறிவுடையோர்.

செ. நாகரத்தினம் கொடிகாமம்

● எவன் நாஸ்திகன்?

□ பணத்திற்காக மதம்மாறுபவனும், பணம் கொடுத்து மதம் மாற்றுபவனும்.

ப. தங்கவேல் ஆனைக்கோட்டை

● சாராயம்குடிப்பவனைப்பார்க்கும் போது என்னதோன்றுகின்றது?

□ குடலை அறுக்கும் வாளை விழுங்கும் வீரனைப்போன்று தோன்றுகின்றது.

தி. ஸ்ரீஅனந்தன் கொக்குவில்

● மகான்களுக்கு நாம்செய்த கைமாறு என்ன?

□ அவர்களின் புஸ்தகங்களை அலமாரியில் பூட்டிவைத்திருக்கின்றோம். அவர்களின் படங்களை சுவரில் மாட்டிவைத்திருக்கின்றோம். அவ்வளவுதான்.

பி. கே. காளிமுத்து கோவுஸ்ஸ

● காதலுக்குப்பின் திருமணம் எத்தன்மை வாய்ந்தது.

□ மறைவில் இருந்தது மணவறைக்கு வந்தது.

## கடாபியும் மகுடியும்

கடாபி முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கார்ட்டர் அவர்களை வெள்ளைமாளிகையின் தேவதை என வர்ணித்தார். மகுடியாரும் கடாபியின் கருத்தை தமக்கே உரித்தான பாணியில் பின்வருமாறு ஒருமுறை குறிப்பிட்டார், "வெள்ளை மாளிகையிலிருந்து பறந்துபோன சமாதானப் புறா.

அன்று மகுடி கூறியதை இன்று சர்வதேச தலைவன் கடாபி உறுதிப் படுத்தியுள்ளார்,

—ஒரு வாசகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஒரு நாவல் அறிமுகம்

**சி. வி. வேலுப்பிள்ளையின்**

# வீடற்றவன்

● வைகறை வெளியீடு.

சி. வி. வேலுப்பிள்ளை, நாடறிந்த பழம்பெரும் மலையக எழுத்தாளர். தேயிலைச் செடிகளுக்கும், றப்பர் மரங்களுக்கும் உரமாகிப் போகின்ற ஒரு சமூகத்தின் இதயத்துடிப்புக்கு இலக்கிய வடிவம்கொடுத்து வருபவர்கள். ஆங்கிலத்தின் மூலமும் இவரது இலக்கிய முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. தேயிலைத் தோட்டத்திலே' இவரது கவிதையாற்றலுக்கு ஒரு எடுத்துக்காட்டு 'வீடற்றவன்' என்ற இவரது நாவல் ''வைகறை'' அழகிய முறையில் இப்போது நூலுருப்பெற்றுள்ளது. மலையக இலக்கியத்தை வளமூட்டும் முயற்சி இது.

தோட்டத்துரைமார்களும், அவர்களது எடுபிடிகளான கங்காணிமாரும் தோட்டங்களில் தர்பார் நடாத்திய வேளையில், தொழிலாளர்களுக்காக சங்கம் அமைக்க எடுத்த முயற்சியால் அவன் -ராமலிங்கம் தோட்டத்தை விட்டுத் துரத்தப்படுகின்றான். தோட்டங்களில் வேலை தேடி அலைகின்றான். ஏமாற்றம்தான் மிஞ்சுகின்றது. அவனது மூதாதையர்களது இரத்தத்தாலும், வியர்வையாலும் உருவாகிய தோட்டங்கள் அவனுக்கு முன்னே விரிந்து கிடக்கின்றன. அவனுக்கு மட்டும் வேலை கிடைப்பதாய் இல்லை. 'அவன் விம்மி அழுத குரல்மட்டும் மௌனத்தைக் கலைத்தது.

'வீடற்ற' ராமலிங்கம் ஒருதனி மனிதனல்ல. வீடும், நாடுமற்ற ஒரு சமூகத்தின் குறியீடு. அவனுக்கு மட்டுமல்ல, அந்தச் சமூகம் முழுவதுக்கும் எதிர்காலம் கேள்விக் குறிதான். இன்னும்கூட.

—அகண்ட வெளியில் மூன்று அடிக்கு ஒரு தேயிலைச் செடியை கொண்ட பல்லாயிரம் நிரைகள் ராட்சத கம்பளத்தை விரித்ததைப்போல் அவன் மனதைக் குத்தியது. இந்த மரம், செடி, கட்டிடங்கள் வெறும் கைகளால் உருவாக்கப்பட்டவைகள். 'இவைகள் எல்லாம் செஞ்சு என்ன பிரயோசனம்? உக்கார எதுவுமில்லையே..."

—பிறக்க இடம் தெரியாது அவன் கர்ப்பத்தில் வளரும் சிசுக்காகவும் அவள் தேம்பித்தேம்பி அழுதாள். —இவை பொருள் பொதிந்தவை.

'வீடற்றவன்' ''வைகறை"யின் மூன்றுவது வெளியீடு. ராமையாவின் 'ஒரு கூடைக்கொழுந்து' (சிறுகதைகள்) —இவை ஏற்கனவே வெளியிடப்பட்டவை. இவையும் மலையக சமூகவாழ்வின் பிரச்சினைகள், அனுபவங்களைத் தரிசிக்கத் தந்தவை. பிரசுர வசதிகள் மிகக் குறைந்த நிலையில், ''வைகறை''யின் இவ்வெளியீட்டு முயற்சிகள் விசாலிக்கப்படுவதும், விசாலிக்கப்பட உதவுவதும் நமது இன்றைய இலக்கியச் சூழலின் தேவைகள்.

''வைகறை''யின் மூன்று வெளியீடுகளினதும் அட்டை ஓவியங்களை வரைந்தவர் கே. கே. ராஜா. ''வைகறை'' மூலம் நமக்கு நல்லதொரு ஓவியரும் அறிமுகமாகியுள்ளார்.

**சசி. கிருஷ்ணமூர்த்தி**

## கதையில் கொய்தவை

● ''ரோமியோ - ஜூலியட்டும், லைலா மஜ்னுவும்கூட இப்போது வந்து பிறந்திருந்தால் காதலுக்கு அவ்வளவு கஷ்டப்பட்டிருக்க மாட்டார்கள். ஒன்று காதலை நிராகரித்திருப்பார்கள், அல்லது கல்யாணத்தை நிராகரித்திருப்பார்கள். இந்தக்காலத்தில் காதல் என்பது கம்பியூட்டர் கணக்குப் போடுவதைவிடவும் ரொம்பவும் சுலபமான காரியமாகி விட்டது.''

பிரமச்சாரிகள் என்ற கதையில் எம். ஜி. சுரேஷ்

● ''பணம் இல்லாமல் ஒருபெண்ணுக்கு மணவாழ்க்கை கிடைக்காததற்கு வெட்கப்பட வேண்டியவர்கள் ஆண்கள்தான். அத்தகைய பெண் விபசாரம் செய்ய வெட்கப்படவேண்டியதில்லை. வெள்ளை மார்க்கட்டில் விலைபோகாமல் சீரழிந்து கறுப்பு மார்க்கட்டில் அநியாய விலைவிற்கும் பொருள் பெண்தான்.''

'சத்தியத்தின் கேள்வி' என்ற கதையில் அழகாபுரி அழகப்பன்,

● ஒவ்வொருத்தர் பெயரிலேயுங்கூட சாதியும், மதமும் புகுந்துக்கிட்டிருக்கே அதை எப்படி ஒழிக்கிறது.

'இப்படியொரு பிரச்னையா?' கதையில் எஸ். கிருஷ்ணமூர்த்தி.

● நான் எத்தினி அலைஞ்சாலும் அடிச்சு வெரட்டிருங்க. வேலைகேட்டால் போடா பிச்சைக்காரப் பயலென்றுங்க. பிச்சை கேட்டால் போய் வேலைசெஞ்சு பிழையெண்டான்றுங்க.

''வாசலில் ஒருத்தி'' என்றகதையில் ஆர். சூடாமணி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்தேன்.... சிந்தித்தேன்....

□ சுந்தர் □

யாழ்ப்பாணத்தில் கோயில்கள் வரிசையாகக் கொடியேறி விழாக் கோலம் பூணும் உற்சவகாலம் ஆரம்பமாகிவிட்டது.

விரதகாலம், இந்துக்கள் விரத கோலத்தில் ஆலயதரிசனத்தில் அலைந்துதிரியும் நேரம்.

மீனவர் ஒருவரை வழியிற் சந்தித்தேன்.

''விரதகாலமாச்சே... உங்கள் பாடு வியாபாரம் ரெம்பக் குறைவாக இருக்கும்... என்ன' என்று சற்று அநுதாபக் குரலிலேயே கேட்டேன்.

வயதான அந்த மீனவர் கலகலவெனப் பெரிதாகவே ஒரு அனுபவச் சிரிப்பை உதிர்த்துவிட்டு —

''ஐயா இது முன்னைய யாழ்ப்பாணமல்ல... இப்போதெல்லாம் அந்நிய நாட்டில் வேலைபார்ப்பவரெல்லாம் திருவிழாவிற்கு லீவில் வந்து நிற்கிறார்கள்... அதனால் சாதாரண மற்ற நாட்களிலும் மீனுக்கு இப்போது நல்ல 'டிமான்ற்'... மீனை வாங்கி சமைத்து படைத்துவிட்டு மஞ்சல்நீர் தெளித்துவிட்டு விரதகாரர்கள் சாப்பிடுகிறார்கள் போலும் என்று கூறிவிட்டு ஒருநமட்டுச் சிரித்தார்.

நான் அசடாய் வழிந்தேன்.

O—O—

எனக்கு இருதயநோய் ஏற்பட்ட பின்னர் ஆஸ்பத்திரி, கிளினிக் இவைகள் சர்வசாதாரணமாகி விட்டன.

வித்தியர்சமான நிலையிலுள்ள, விதம் விதமான நோயாளிகளை, கிளினிக் நாட்களில் சந்திப்பதும், அவர்களோடு பேச்சுக்கொடுத்து சுவாரஸ்யமான தகவல்களைப் பெறுவதும் அதையொட்டி சிந்திப்பதும்கூட சாதாரணமாகி விட்டது.

சமீபத்தில் ஒரு அம்மையாரைக் கேட்டேன்.

''உங்களுக்கும் இருதய நோயா அம்மா?''

அதற்கு அந்த அம்மையார் ''அதையேன் தம்பி கேட்கிறாய் எனக்கு கண்களைப்போல் இரண்டு பிள்ளைகள் இருவருமே ஒரேயடியாக சிங்கப்பூருக்கு வேலைதேடிச் செல்ல 'பிளேன்' எடுத்தஅன்று ஏற்பட்ட நெஞ்சு நோதான்... இன்னும் நின்றபாடில்லை...'' என்று பெருமூச்செறிந்தார்.

மற்றுமொரு பெண்மணியைக் கேட்டேன் அவரின் நோயின்காரணம்பற்றி... அவர் சொன்னார்—

''எனதுமகன் ஜேர்மனிக்கு போய் மூன்றுமாதமாகுது ஒருவிதமான தகவலோ... கடிதமோ இதுவரைகிடைக்கவில்லை...'' என்ற அவருக்கும் கடுமையான இருதய நோய்தான்.

—பின்னர் சிறிது நேரத்தில் அவர் பற்றிநான் அறிந்து கொண்ட சுவரரஸ்யமான விடயம்.

அந்த அம்மணியின் பெயர் 'இதயவதி' என்பது.

O—O—

எழுத்தாள நண்பர் டி. பி. எஸ். ஜெயராஜ் சிரித்திரன் அலுவலகத்திற்கு விஜயம் செய்திருந்தார்,

அவரிடம் உள்ள ஒரு விசேஷ அம்சம்— ஒருவரிடமும் 'ஓசி' வாங்கிப்படிப்பதில்லை. யாரையும் ஓசிவாசியாக ஆக்குவதுமில்லை.

இதுபற்றி அவர்பெருமிதமாகவே கூறுவார். இதனைக்கூறும்போது தன் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தையும் குறிப்பிட்டார்.

தன் முதற்படைப்பு சிரித்திரனில் பிரசுரமாகி வெளிவந்திருந்த அன்றைய தினம் —

அன்று ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். கையில் ஒரு சிரித்திரன் —மனதில் ஒருவிதமான புழுகமும், பெருமிதமும் தழும்பி ஓடியது.

நேரம் நகர்ந்தது. சிறிது நேரத்தில் மனதில் ஏதோ நெருடல்... ஒருவரும் சிரித்திரனை இரவல் கேட்கவில்லையே... இத்தனை பயணிகளில் ஒருவராவது அந்த எண்ணம் கொண்டவர்களில்லையா...?

என்னுடைய படைப்பு இதில் இருக்கிறதே... யாராவது இரவல் கேட்டு வாங்கி பக்கம்பக்கமாக நகர்த்த... அந்தப்பக்கத்தை...... என்னுடைய படைப்பு வெளியான அதே பக்கத்தைப் படித்தால்...' நினைக்க சுகமாக இருந்தது.

—ஆனால் ஒருவருமே கேட்கவில்லையே...! சிறிது நேரத்தில். 'பக்கத்திலிருந்த ஒருவர் 'தம்பி இந்தப் புத்தகத்தை ஒருக்காதாறீங்களா...? என்றார்.

'ஓ...' உற்சாகம் மேலிட அவரிடம் கொடுத்தேன்.

புத்தகம் முழுவதை அவர் ரஸித்துப் படித்தார்.

அதுவும் அந்தப்பக்கத்தை...படிக்கும்போது.

—அந்த உவகை இன்னும் பசுமையாகவே இருக்கிறது என்றார் நண்பர் ஜெயராஜ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை நெஞ்சத்தை அள்ளும் வண்ணம் காப்பியமாக்கித் தந்தவர் இளங்கோ அடிகள். இவர் சேரன் செங்குட்டுவன் என்ற பெயரில் பெரும் புகழ்பெற்ற சேர அரசனது தம்பியாரவார். இவரது இளமைப் பருவத்தின் போது அரச அவைக்கு வந்தஒரு சோதிடர் 'அண்ணன் செங்குட்டுவன் இருக்கக் கூடியதாகவே தம்பியாகிய இளங்கோ அரசாள்வான்' எனக்கூறிய வாக்கைப் பொய்யாக்கித் தமது பரம்பரைப் பாரம்பரியத்தை நிலைநாட்டும் பொருட்டு அரசைத் துறந்து துறவறம் பூண்டு இளங்கோ அடிகள் ஆகினுர்.

இளைய அரசன் என்பதே இளங்கோ என்று காரணப் பெயராகிற்று. பின்பு துறவியாகி அடிகளானுர்.

சிலப்பதி காரத்தில் இறுதிக் காண்டமான வஞ்சிக் காண்டத்தில் தனது சகோதரனுன சேரன் செங்குட்டுவனது பெருமைகளை, கண்ணகிக்கு வடநாட்டிலிருந்து கல்கொண்டு வந்த கதையில் பாடினுர். தமிழரின் வீரத்தைப் பழித்த கனக விஜஜரின் கொட்டத்தை அடக்கு முகமாக அவர்களது தலையிலே பத்தினிக்குக் கல் சுமந்து வந்த வரலாறு வஞ்சிக் காண்டத்தில் அழகாகக்கூறப்பட்டுள்ளது.

அண்ணனைப் பாடிய அடுத்தவரின் பெயர் இது வரையில் இலக்கிய உலகில் யாருக்குமே தெரியாது. நந்திக் கலம்பகம் என்ற ஒரு கலம்பகநூல் இலக்கிய வானில் இளநிலாவாக ஒளிவீசுகிறது. நந்தி வர்மன் என்ற அரசன் இக்கலம்பத்திலே பெரிதும் புகழப்படுகின்ருன். இக்கலம்பகத்தைப் பாடியவர் நந்திவர்மனின் சகோதரன் என்பது ஆராய்ச்சி அறிஞர்களின் முடிபு. இருப்பினும் இதுவரை இப்புலவரின் பெயர் அறியப் பட்டதாகத் தெரியவில்லை.

அரசுரிமைப் பிரச்சனையில் தனது சகோதரனை அறம்பாடி அழிப்பதற்காகவே இக்கலம்பகத்தை இவர் பாடினுர் எனவும், அந்நூலை புலவர் பாடும்போது அரசன் நேரிலே கேட்டுக்கொண்டிருந்தால், தீயினுல் எரிந்து அழிந்து விடுவான் என்பதை அரசன் அறிந்திருந்த போதிலும், தமிழ்க் கவிதைமேல் வைத்திருந்த உயிரிலும் இனிய பற்றினுல் தனது முன்னிலையிலேயே இக்கலம்பகத்தை அரங்கேற்றச் செய்து தீயினுல் எரிந்து அழிந்தான் எனவும் நந்திக் கலம்பகம் மூலம் அறியக் கிடக்கிறது.

ஆக இவ்விரண்டு புலவர்களும் தீ-க்கவிஞர்கள் என்று குறிப்பிடப்படக் கூடியவர்கள் சிலம்பிலே கள்வன் இல்லாக் கணவனைக் காவலன் கள்வனுக்கிக்கொலை செய்தான் என்ற காரணத்தால் கலங்கிய கண்ணகியின் கற்புத்தீ மதுரை மாநகரை எரித்ததை காவியமாக்கினுர் இளங்கோ. நந்திக்கலம் பகத்தில் அறம்பாடி தீயெழச் செய்தார் புலவர்.

அண்ணனுக்காக அரசைத் துறந்த இளங்கோ அண்ணனின் புகழ்பாடி, ஆக்கத்தைச் செய்தார். அண்ணனின் புகழ்களையே அறமாகப்பாடி அழிவைச்செய்தார்.

**அகளங்கன்**

# சிரித்திரு

● என்னண்ணே கவலையாகயாக இருக்கிறுய்?

☐ பேப்பர்லே ஆறுகோடி சாராயப் போத்தல் மூடி இறக்குமதி செய்யிறதா போட்டிருக்கு.

● அதுக்கேன் கவலை?

☐ அதைச்சாரயப் போத்தலாக இறக்குமதி பண்ணினு எவ்வ்ளவு நல்லர்யிருக்கும்



● என் மனைவி வீட்டிலே ஒரு வேலையும் செய்யமாட்டாள். எல்லாம் நான்தான் செய்ய வேண்டும். ஆனுல் வெளிநாடு போகவேணும் என்று அடம் பண்ணுகிருள்.

☐ ஏன்?

● பணிப்பெண் வேலைபார்க்கப் போகிருளாம்,

☐ ?...?...?...

கௌரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன்பொழுது



கரவேக சுரஞானகேசரி, லயஞானவாரிதி

**எம். கே. கணேசபிள்ளை**

(நாச்சிமார் கோவிலடி கணேசன்)

**இன்று ஈழத்தின் முன்னணி தவில் வித்துவான்களில் ஒருவராக விளங்கும் திரு. எம். கே. கணேசபிள்ளை அவர்கள் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இன்று பிரபலம் பெற்று விளங்கும் இசைக்கலைஞர்களான என். ஆர். கோவிந்தசாமி, என். ஆர். சின்னராசா, என். ஆர். சந்தான கிருஸ்ணன் ஆகியோரின் தந்தையாரான தவில் வித்துவான் திரு. இரத்தினம் அவர்களிடம் தவில் பற்றிய ஆரம்பப் பாடங்களைக் கற்றுக்கொண்ட திரு. கணேபிள்ளை அவர்கள் கேள்வி ஞான மூலமும் சாதகம் செய்வதில் இடைவிடாத முயற்சியாலும் முன்னணிக்கு வந்தவர் காலஞ்சென்ற தவில்மேதை தட்சணாமூர்த்தி அவர்களைத் தனது வழி காட்டியாகக் கொண்டுதாம் முன்னேறியதாகச் கூறும் இக்கலைஞனின் செவ்வி இங்கே இடம்பெறுகின்றது.**

கே; தவில் வாசிப்பதை உங்கள் முழுநேர வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருக்கிறீர்களே! தவில் வாத்தியத்தை நீங்கள் தெரிந்தெடுத்தமைக்கான காரணம் என்ன எனக்கூறமுடியுமா?

ப: எனது தந்தையார் என்னை ஒரு நாதஸ்வர வித்துவானுக்கவே விரும்பினுர். நானே தவில்வித்துவான் தட்சணாமூர்த்தி அவர்கள் தவில் வாசிப்பதைப் பார்த்துவிட்டு அவரின் வழிகாட்டலின் கீழ் தவில் வாசிப்பதையே என் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டேன்.

கே; தவிலுக்கு நாதஸ்வரம், நாதஸ்வரத்திற்குத் தவில் என இரு வாத்தியங்களும் இணைபிரியாத வாத்தியங்களாக இருக்கின்றன. வேறு எத்தகைய வாத்தியங்களுக்குத் தவிலைப் பயன்படுத்தலாம் எனக் கருதுகிறீர்கள்?

ப: நான், ஏ. கே, சி, நடராஜன் அவர்களுடைய கிளார்னெற்றுக்கு தவில் வாசித்திருக்கிறேன் திரு ஜெயா, விஜயா ஆகியோரின் வாய்ப்பாட்டுக் கச்சேரி கேரளாவில் இடம் பெற்றபோது மிருதங்கம் இல்லாது பிடில்உடன் தவில் வாசித்தேன். ஈழத்து வயலின் வித்துவான் திரு. ராதாகிருஷ்ணனுக்குத் தவில் வாசித்திருக்கிறேன். லீவர் பிரதர்ஸ் முகாமையாளர் திரு. வாமதேவன் அவர்களின் புத்திரியின் பரதநாட்டிய அரங்கேற்றத்தின்போதும் தவில் வாசித்திருக்கிறேன். இன்னும் என்னென்ன வாத்தியங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் இணை வாத்தியமாக தவிலைப் பயன்படுத்த முடியுமோ அவை பற்றியெல்லாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறேன்,

கே: தவிலுக்கு ஏதாவது தனித்துவமான சிறப்புஇருக்கிறதா?

ப: அதிகநேரம் அமர்ந்திருந்து உற்சாகமாக வாசிக்கக் கூடிய தோல் வாத்தியம் தவில் ஒன்றுதான். இதுஒரு பேரிவாத்தியம். ஆலயங்களில் இடம் பெறும் உற்சவங்களில் கோயில் கொடியேற்றத்தின்போது அர்ச்சகர்கள் தவிலை வைத்துப் பல மந்திரங்களைச் செபிப்பார்கள். அத்தோடு ஒவ்வொரு மந்திரங்களுக்கும் ஒவ்வொரு தொனியை தவில் மூலம் வாசிக்கச்செய்து கொடியை ஏற்றுகிருர்கள். அடுத்ததாக, திருமண இல்லங்களில் தாலி கட்டப்போகின்ற தென்பதற்கு அறிகுறியாக கெட்டிமேளம் கொட்டப்படுகின்றது. அத்தோடு மணமக்களின் செவிகளில் கர்ண கடூரமான வார்த்தைகள் விழாதபடியும் கெட்டிமேளம் கொட்டி தவிர்த்துவிடுகிறோம். இவையெல்லாம் தவிலுக்குரிய தனித்துவமான பெருமைகள் அல்லவா!

கே: ஆலய உற்சவங்களின்போது ஒற்றைக்காலில் நின்று தவில் வாசிக்கப்படுகின்றதே! இதற்குக்காரணம் என்ன?

ப: ஆலய வழிபாட்டில் தவில் பெறுகின்ற முக்கியத்துவங்களில் அதுவும் ஒன்ருகும். அதனைத் ''பூத நர்த்தனம்" என்று அழைப்பார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



● நான் உங்கள் தொகுதியில் வெற்றி பெற்ருல் உங்கள் பின் தங்கிய கிராமத்தைப் பெரும் நகராக்கி விடுவேன்.

★ வேண்டாம். இப்போ கிராமத்தை வைத்தே சினிமாப் படம் எடுக்கிருர்கள். கிராமத்தை பின்னணியாக வைத்தே கதை எழுதி எழுத்தாளர்கள் பிழைக்கிருர்கள். அதையும் கெடுத்துப்போடாதீர்கள்.

ச. ரா. பா.



ராமு: இன்னும் இருபத்தைந்து வருஷம் போனுல் உலகில் விலங்கினங்களே இருக்காதாம்.

சோமு; அப்படியானுல் இனிவரப் போகும் மாணவர்களை கழுதை, எருமை என்று டீச்சர் திட்டமுடியாது போய் விடுமே,

கே: ரி. ஆர். மகாலிங்கத்தின் புல்லாங்குழலுக்கு திரு. வலங்கைமான் சண்முகசுந்தரம் தவில் வாசித்திருக்கிருர். இப்போது புல்லாங்குழல் ரமணிக்கும் தவில் வாசிக்கிருர். இதேபோல் குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் கச்சேரிக்கு வலையப்பட்டி தவில் வாசித்திருக்கிருர். இவ்வாருக் காற்று வாத்தியங்களுக்கும் நரம்பு வாத்தியங்களுக்கும் தொனிகூடிய தோல் வாத்தியமான தவிலை இணைவாத்தியமாக வாசிப்பது பற்றி உங்களுடைய கருத்து என்ன?

ப: தவிலை சாதாரணமாக சுரவாத்தியமான நாதஸ்வரத்திற்கு வாசிப்பதுதான் வழக்கம். இப்படியாக மென்மையாக வாசிக்க தனித்துவமான திறமை வேண்டும். பாட்டுஞானம் வாய்க்கப் பெற்றவராக தவில் வித்துவான் விளங்கும் பட்சத்தில்தான் துணை வாத்தியங்களோடும் நரம்பு வாத்தியங்களோடும் மேடையேறும் தவில் கச்சேரி சோபிக்க முடியும்.

கே: காலஞ்சென்ற தவில்மேதை தட்சணுமூர்த்தியுடனும் மற்றும் தவில் வித்துவான் இணுவில் சின்னராசா ஆகியோருடனும் இணைந்து நீங்கள் தனி ஆவர்த்தனம் செய்திருக்கிறீகள். அவற்றை அப்போது பலர் பார்த்து, காதாரக்கேட்டு ரசித்து மகிழ்ந்தார்கள். மனம் திறந்து பாராட்டினுர்கள். ஆனுல் இப்போதெல்லாம் அப்படியான தவில் கச்சேரிகள் இடம் பெறுவதில்லை என்று வருத்தப்படுகிருர்களே! இவ்வாருன கச்சேரிகள் இடம் பெருமைக்கு யாது காரணம் என நினைக்கிறீர்கள்?

ப: தவில் வித்துவான்களான திரு தட்சணுமூர்த்தி திரு சின்னராசா ஆகிய இருவரும் எனது மருமக்கள். அவர்கள் இருவருடனும் சேர்ந்து அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார்கோயிலில் இடம்பெற்ற மேளக்கச்சேரியின்போது நான்கு மணித்தியாலங்கள் தனி ஆவர்த்தனம் செய்தோம். திரு. தட்சணுமூர்த்தி அவர்களிடம் அளவுக்கு அதிகமான கற்பனைத்திறன் இருந்தது, வந்தது வராமல் வாசிக்கும் கற்பனைத்திறன் கூடியவாசிப்பு அவரது வாசிப்பு. பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறுவதுபோல் நானும் திரு. சின்னராசாவும் அவருடன் இணைந்து வாசித்தோம். இன்றும் திரு. சின்னராசா, திரு. புண்ணியமூர்த்தி மற்றும் திரு. குமரகுரு போன்றவர்களுடன் இணைந்து தவில் வாசிக்கும்போது தனியான இரசிகர் கூட்டம் இருக்கத்தானே செய்கிருர்கள்.

கே: சில தவில் வித்துவான்கள் லய ஆராய்ச்சியோடு கூடிய முறையில் மேடைகளில் தவில் வாசித்து அந்த வாத்தியத்திற்கு ஒரு உயர் அந்தஸ்தைக் கொடுக்கிருர்கள். சில தவில் வித்துவான்கள் மேடையைச் சுற்றி வீற்றிருக்கும் இரசிகர் கூட்டத்தை நோட்டம் விட்டு அவர்களைக் கருத்தில் கொண்டு லளிதமாகவும் நளினமாகவும் தவிலைக் கையாண்டு சமயோசிதமாக நடந்து கொள்கிருர்கள். இது தொடர்பாக நீங்கள் கூறவிரும்புவது என்ன?

ப: இன்று ஈழத்தில் தவில் வித்துவான் திரு. சின்னராசா அவர்கள் லய ஆராய்ச்சியோடு கூடியமுறையில் தவிலைக் கையாண்டு வருகிருர் தவில் வாத்தியத்திற்கு ஒரு உயர்ந்த இடத்தைக் கொடுக்க அவர் பெரும் முயற்சி எடுத்து வருகிருர். அவர் அதை ஒரு கடப்பாடாகக் கொண்டு செய்தும் வருகிருர். என்னைப் பொறுத்தவரை நான் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞல் இயன்றளவு பொதுமக்களைத் திருப்திப்படுத்தும் வகையிலும் அதேவேளையில் லய சம்பந்தமான விவகார வாத்திய முறைகளிலும் இயன்றவரை முயற்சிசெய்து வாசித்து வருகிறேன்.

கே: இலங்கையில் மிருதங்கம் போன்ற தோல்வாத்தியங்களை யாரும் விரும்பிக்கற்கிறுர்கள். ஆனல் தவிலைப் பொறுத்தவரை பாரம்பரியமாக இசைக்கலைஞர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பயின்று கச்சேரி செய்து வருகிருர்கள். இந்தியா போன்ற நாடுகளில் நிலைமை எப்படி இருக்கின்றது.

ப: இந்தியாவில் சமூக வேறுபாடுகளின்றி விரும்பிய எவரும் தவிலைப்படிக்கிருர்கள். கச்சேரி செய்கிருர்கள். மன்ஞர்குடி என்ற இடத்தில் ''லக்சுமி நாராயணன்'' என்ற பிரபலமான ஐயர் ஒருவர் தவில் வாசித்து வருகிருர். இதேபோல் பழநியில் 'நரசிம்மன் ஐயர்' நாதஸ்வரம் வாசித்து வருகிருர். ஆனல் ஈழத்தைப் பொறுத்தவரை ஒருபகுதி சமூகம்தான் இதனைக்கற்கலாம் என்ற அபிப்பிராயம் வளர்ந்து விட்டது. இது தவிர்க்கமுடியாதுள்ளது. இந்த நிலைமை மாறவேண்டும். அப்போதுதான் சமூக ஏற்றத்தாழ்வுகள் மறைந்து யாரும் இதனைக் கற்கக் கூடியவாய்ப்பு ஏற்படும்.

கே: இந்தியாவில் நீங்கள் கச்சேரி செய்தபோது உங்களுடன் அமர்ந்து யார்யார் வாசித்தார்கள்? அங்கு யார் யாருடைய கச்சேரிக்கு நீங்கள் தவில் வாசித்தீர்கள்?

ப; தவில்மேதை வலங்கைமான் சண்முகசுந்தரம் மற்றும் கலியமூர்த்தி, பழனிவேல் ஆகியோருடன் ஒரேமேடையில் அமர்ந்து தவில் வாசித்தேன். மறைந்த நாதஸ்வரமேதை திருவாவடுதுறை இராஜரட்ணம்பிள்ளை, காரைக்குறிச்சி அருணசலம் மற்றும் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், கோட்டூர் இராஜரட்ணம்பிள்ளை, ஷேக் சின்னமௌலான மதுரை சேதுராமன் - பொன்னுசாமி சகோதரர்கள், குளிக்கரைப் பிச்சையப்பா இப்படியாகப்பலருடைய நாதஸ்வரக் கச்சேரிகளுக்கு தவில் வாசித்திருக்கிறேன்.

கே: இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளைத் தவிர சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தமிழ் இசை வளர்ச்சி எப்படி இருக்கிறது? அந்த நாடுகளில் தோன்றிய தவில் வித்துவான்கள் யாராவது இருக்கிருர்களா?

ப: மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் ஆலயங்களில்தான் மேளவாத்தியக்குழுவினர் இருக்கிருர்கள். மேடைக் கச்சேரிகள் செய்வதில்லை. நான் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை, கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி ஆகியோருடன் அங்கு சென்றிருந்தேன். எங்களுக்கு போதிய ஆதரவும் மதிப்பும் இருந்தது. தமிழர்கள் மட்டுமன்றி சீனர்கள், மலாயர்கள் ஆகியோரும் நன்கு இரசித்தார்கள். மலேசிய அமைச்சர் திரு. சம்பந்தன் பொன்னுடை போர்த்திக்கௌரவித்தார். தங்கப்பதக்கமும் சூட்டினுர். சிங்கப்பூரில் மாணிக்க வாசகர் எம். பி, எமக்குப்போதிய ஆதரவு தந்தார். கோலாலம்பூரிலும், சிங்கப்பூரிலும் சங்கீத சபாக்களும், இசை மன்றங்களும் இருக்கின்றன. தமிழிசை அங்கு வளர்ந்து வருகின்றது.

கே: நீங்கள் தவில் மட்டுமன்றி கெஞ்சிரா வாசிப்பதையும் நாங்கள் பார்த்திருக்கிறேம். கெஞ்சிரா வாசிப்பதற்கெனத் தனியான பயிற்சி பெற்றீர்களா?


ப: இலங்கை வானெலிக்கலைஞர் எம். கே. சண்முகம் பிள்ளை எனது சொந்த சகோதரர். அவர் வானெலி நிகழ்ச்சி ஒன்றிற்காக எனக்கு கெஞ்சிரா கற்றுத் தந்தார். சுமார் ஒருவார காலத்தில் அதனைக்கற்றுக்கொண்டேன்,

கே; இருகையால் கெஞ்சிரா வாசிக்கும்போது சிரமம் ஏற்படுவதில்லையா?

ப: மேடையில் மிருதங்க வித்துவான் அமர்ந்திருந்து இருகைகளாலும்சேர்த்து சொற்கட்டுகளைஅமைத்து

- இந்தமுறை தீபாளிக்கு உங்க மருமகன் எண்ணை வைத்து முழுகி கோடிகட்டிக் கொண்டாட வருவாரா?

☐ அவர் அரபு நாட்டிலல்லவா வேலையாக இருக்கிருர். பிறகேன் எண்ணை முழுக்குப் போட இங்கே வருகிருர்?



- வீட்டுக்கூரை ஓட்டில் தேங்காய் விழுந்து ஓடுகள் உடைந்து வெட்டவெளியாகி இருந்து மழை அதற்குள்ளால் வீட்டிற்குள் பெய்யத் தொடங்கியதும் குடியிருப்பவர் பாடியபாட்டு.

புதிய வானம்
புதிய பூமி
எங்கும்
பூமழை பொழிகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பார். அதே கச்சேரியில் நான் கெஞ்சிரா வாசிக்கும்போது அதற்கு ஈடாக உள்ள ஜதிகளைச் சொற்கட்டுக்களை எனதுகற்பனைத்திறனிற்குஎட்டிய வரை ஒருகை வாத்தியமான கெஞ்சிராவில் சிரமப்பட்டுத்தான் வாசிக்கிறேன்.

கே: உங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத இசைக்கச்சேரிகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

ப: எனக்குப் பன்னிரண்டு வயதாகவிருக்கும்போது காலஞ்சென்ற நாதஸ்வரமேதை திருவாவடுதுறை இராஜரட்ணம்பிள்ளை அவர்களுக்குத் தவில் வாசித்தேன். திருமதி ருக்மணி அருண்டேல் அவர்களின் கலாஷேத்திரத்தில் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

தஞ்சாவூர் கானசபாவில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றின்போது பாலக்காடு மணிஐயரது மிருதங்க கச்சேரிக்கு கெஞ்சிரா வாசித்தமை என்னுல் மறக்கமுடியாது. பாலக்காட்டில் ஒரு தவில் கச்சேரிக்கும் அவர் ஏற்பாடு செய்துதந்தார்.

சென்னையில் எனது கச்சேரி இடம்பெறும் போது திரைப்பட நடிகர் ஏ. வி. எம். ராஜன் புஸ்பலதா தம்பதிகள் வந்தமர்ந்திருந்து கேட்டு ரசித்துவிட்டுச் செல்வார்கள்.

இவற்றையெல்லாம் என்னுல் என்றுமே மறக்க முடியாது.

கே; வடநாட்டு வாத்தியமான ஷெனுய்க்கு தவில் வாசிக்க முடியும் எனக்கருதுகிறீர்களா?

ப: வடநாட்டு வாத்தியமான ஷெனுய்க்கு தவில் வாசிக்கமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கே: உங்களிடம் அமெரிக்கர் ஒருவர் தவில் கற்ருரே! அவருக்குத் தவில் கற்பித்தபோது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் பற்றிக்குறிப்பிட முடியுமா?

ப: ஹவாய் பல்கலைக்கழக மாணவனுன திரு. பிராங் (Frank Baberich) அவர்கள் தமது பட்டப்படிப்பிற்கு ஒரு பாடமாக கீழைத்தேய வாத்தியமான தவிலைத் தெரிவுசெய்திருந்தார். அவருக்குத் தவில் படிப்பிக்கும்போது அவர் தவிலைப்பற்றி ஆதியோடந்தமாக ஆராய்ச்சி செய்து படிக்கலானுர். மிருதங்கம் கற்றுக்கொள்ள விரும்பும் ஒருவருக்கு அது பற்றிக் கற்பிக்க நூல்கள் இருக்கின்றன. ஆனுல் தவிலைப்பற்றி அறிந்துகொள்ள நூல்களும் இல்லை ஆகவே அவருக்குத் தவில் கற்பித்த அனுபவம் மகா பயங்கரமானது என்றுகூடச் சொல்லலாம். "தா, தீ, தொம்" என்ற தவில் சொற்கட்டுகளை "டா, டீ என்று சொன்னுல் என்ன என்ருர். 'தொம்' என்று ஏன் இரண்டு எழுத்துக்கள் என்று கேட்டார். இதனுல் பராக்கட்டையைக் கையில்

அமெரிக்கரான
**திரு பிராங் பேபரிச் (FRANK BABERICH)**
அவர்களுக்கு
**திரு கணேசன் தவில் கற்பிக்கும் காட்சி**



வைத்துக்கொண்டு, அடித்துக்காட்டி தொனி வேறுபாட்டை எடுத்து விளக்கினேன்.

இவ்வாறுன விளக்கங்களை அளிப்பதற்காக மறைந்த தவில்மேதை அமரர் ஆறுமுகம்பிள்ளை அவர்களை எனது இல்லத்திற்கு அழைத்துவந்து சில விடயங்களைத் தெரிந்து கொண்டபின்பே அவருக்குத் தவிலைக் கற்பித்தேன்.

அவருடன் உரையாடுவதில் மொழிப் பிரச்சினை ஏற்பட்டபோது அவருக்கு ஆங்கிலத்தில் விளக்கம் கொடுப்பதற்காக சங்கீத வித்துவான் ராம் குமாரசாமியை அழைத்து தவிலைப்பற்றி ஆங்கிலத்தில் விளக்கம் கொடுத்தேன்.

ஒருவருடத்தில் கற்பதை அவர் ஒன்றரை மாதங்களில் கற்றுமுடித்தார். மலேசியாவில் நான் கச்சேரி செய்தபோது இவர்தான் தாளம் போட்டார். இவரது தவில் அரங்கேற்றம் திருநெல்வேலி சிவன் கோவில் சந்நிதானத்தில் இடம்பெற்றது.

இப்படியான ஒருவர் நூறு வருடங்களுக்கு முன்பு இத்துறையில் ஈடுபாடு காட்டியிருந்தால் தவில் இன்று உலகப்பிரசித்தி பெற்ற வாத்தியமாக விளங்கி இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே: ஈழத்தில் தவில் வளர்ச்சிக்கு நீங்கள் கூறக்கூடிய ஆலோசனை என்ன?

ப: இந்தியாவில் பல்கலைக்கழக மட்டத்தில் கூட தவிலைக் கற்க வசதியுண்டு. தனியான கல்லூரிகளும் இருக்கின்றன. இதேபோல யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவில் தவிலைக் கற்க வசதிசெய்து தரப்பட வேண்டும். அத்தோடு இந்தியாவில் முதிர்ந்த கலைஞர்கள் தொழில் செய்யமுடியாத காலகட்டத்தில் அவர்களுக்கு ஓய்வூதியப் பணம் வழங்கப்படுகின்றது. இதேபோன்ற ஓய்வுகாலப் பணவசதி எமக்கும் ஏற்பாடு செய்துதரப்படவேண்டும். அத்தோடு எமது இளம் கலைஞர்களான நெல்லியடி செல்வநாயகம், இணுவில் நித்தியானந்தன், எனதுமகன் சிவகுமார் போன்றோர் முயற்சி எடுப்பின் இன்னும் இக்கலை வளரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

நன்றி கலந்த வணக்கம்

செவ்வி கண்டவர்கள்

**பொன். பூலோகசிங்கம்**

**கனக. சுகுமார்.**


---

'செப்டம்பர்' இதழ் கண்டேன். நியூற்றன் குண்டால் உலகம் எதிர்நோக்கியிருக்கும் அபாயத்தினை நகைச்சுவையாய் அட்டைப் படத்தில் காட்டிய விதம் அருமை சிரிப்பூட்டி சிந்திக்க வைக்கும் நகைச்சுவைகள், அறிவிற்கு விருந்தாய், ஆங்காங் கொளிர்ந்த அறிவுத் துளிகள், குறுகிய பதிலால் நிறைந்த அறிவின் வெளிப்பாடான 'மகுடி'யின் பதில்கள் சத்தான புதுக்கவிகள், முத்தான சிறுகதைகள் மொத்தத்தில் முழுக் குடும்பமும் வாசிக்க தகுந்த தரமான இதழ் 'சிரித்திரன்'

**சு, செல்வரத்தினம்**
*124 மெயின் வீதி, பன்விலை*

மனிதன் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக நியூற்றன் எனும் நவீனகுண்டை உருவாக்குவதற்கு அதன் முயற்சியாக நியூற்றன் மரத்திற்கு விஞ்ஞான நீரை இறைக்கின்றான். அந்த மரம் வளர்ந்து நியூற்றன் குண்டுஎனும் காயைத் தரும்போது அந்தக் காயைப்பிடுங்கி அதைப் பயன் படுத்த நினைக்கும்போது அது அவன் அணிந்திருக்கும் உடுப்பு, அணிகலங்களுக்கு தீங்கு விளைவிக்காது மனிதனின் உயிரைமட்டும் குடிக்கவல்லது. இதனால் அவன் உருமாற்றம் அடையும் நிலையை அடைகின்றான். எனவே மனிதன் தன்னையும் அழித்து பிற உயிர்களையும் அழிப்பதற்கு துணிகின்றான். ஆனால் வாழையோ தன்னை அழித்து எமக்கு பயனைத்தருகின்றது. ஆகவே மனிதன் மரத்திலும் கேவலமானவனாக மாறுகின்றான்.

**ப. ஜெயக்கொடி**
ஆழக்கிணற்றடி, பொர்லிகண்டி




இம்மாதம் சிரித்திரனில் வெளியான 'தயவு செய்து கை போடாதீர்கள்' என்ற சுதாராஜின் சிறுகதை மிகநன்றாக அமைந்துள்ளது.
இக்கதையில் இரு சிறப்பம்சங்கள் உண்டு. முதலாவதாக ஒரு ஹோட்டல் முதலாளியின் மனதை உள்ளத்தை உள்ளபடியே படம் பிடித்துக் காட்டியுள்ளார், அடுத்ததாக அரசாங்க ஊழியனுக்கு கிடைத்த 70 ரூபா சம்பள உயர்வு கடைச்சிப்பந்திக்கு கிடைக்கவில்லை யென்பதை துலாம்பரமாகத்தொட்டுக்காட்டியுள்ளார்.

**நா. ரகுநாதன்**
*748 மருதானைவீதி, கொழும்பு10*

சென்ற இதழில் வெங்கடேசரவியின் கவிதைகள், அகளங்கனின் ரிஷிமூலங்கள், ஐவர் தந்த பஞ்சலாத்தி என்பன மிகவும் சுவையான அம்சங்கள்.

குழந்தை சண்முகலிங்கத்தின் பேட்டி வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் புதிய தகவல்களை பேட்டியாளர்கள் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சிக்காததால்... பேட்டி வெறும் பேட்டியாகவே முடிந்துவிட்டது.

'பாரதிநூற்றாண்டுவிழா' கொண்டாடப்படும் இந்த சந்தர்ப்பத்தில் போலிகளின் வாயிலேபாரதி வாசகங்கள் என்னபாடு படுகின்றன என்பதைகேலிச்சித்திர இலக்கிய வடிவம் அர்த்தபூர்வமாக மிக எளிமையான யதார்த்தஉதாரணம் மூலம் விளக்கிய சுந்தருக்கு நன்றிகள்! கூடவே இதுபோன்ற இன்னும் பல ஆழமான 'சமூகப் பிரக்ஞை'யுள்ள கேலிச்சித்திரங்களை சுந்தரிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

மீட்கப்படா அடிமைகள் இருக்கும்வரை, மீட்டப்படும் வீணையின் நாதம் நாராசமாகவே தொனிக்கும். (சபாஷ்)

—என்ற 'மகுடி வாசகங்கள் இந்த உலகில் மீட்கப்படா அடிமைகள் மீட்கப்படும்வரை மீட்டப்பட்டுக் கொண்டே இருக்கும்.

மொழியறியாத வெளிநாட்டவர் கூட ரசித்துச் சிரிக்கக்கூடிய அளவுக்கு சுந்தரின் கேலிச்சித்திரங்கள் சில அமைந்து விடுகின்றன.

உற்சாகமான பாராட்டுக்கள்!
தொடரட்டும் தங்கள் பணி!
நன்றி!

**அன்பு நெஞ்சன்**
யாழ்-பல்கலைக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை உயர்ந்த சிரிப்பு



● இன்பமும் துன்பமும் சேர்ந்து வரும் ஒரு சம்பவம் சொல்லுங்க...

□ சீனிவிலை இறங்கி மாவுவிலை ஏறுதல்.


⊡ ⊡

முதியவர்: இன்று நடந்த கலியாணத்தில் மணமக்களைப் புதுவிதமாக நான் வாழ்த்தினேன், தெரியுமா?

இளையவர்; எனக்குத் தெரியாதே அப்படி என்ன புதுவிதம்?

முதியவர்: 'விலையுயர்வும் சம்பள உயர்வும் போல இணைபிரியாது வாழுங்கள்'' என்று வாழ்த்தினேன்.

⊡ ⊡



● கம்பன் இன்றிருந்தால்...

□ இலங்கையின் 'விலை' யரக்கனையும் தன் காவியத்துள் புகுத்தியிருப்பார்.

முருகு

● என்ன 'பேப்பர்ர'பார்த்திட்டு இப்படி சிரிக்குறீங்க...?

□ வள்ளுவர் சொல்லியிருக்கிறுரே 'இடுக்கண் வருங்கால் நகுக'ன்னு

● அதுக்கென்னுங்க விலையேற்ற இடுக்கண் வந்திருக்கு.



தமிழ் ஆசிரியர்: நிலையற்ற இந்த உலக வாழ்விற்கு ஒருஉவமை சொல்லு...

மாணவன்: விலைவாசி போல...

⊡ ⊡

## மேலும் கீழும்

ஏற்றமும் இறக்கமும்
இயற்கையின் விதியே
—மெய்ஞானியின்
தத்துவவாக்கு
'மேலேச் சென்றவை
கீழே விழுவது திண்ணம்'
—விஞ்ஞானியின்
கண்டுபிடிப்பு.
விதிவிலக்கு,
கீழ்நோக்காது
மேலே மேலே செல்லும்
'விலைவாசி'



ஆசிரியர்: —''விலையுயர்வு வரும் முன்னே............'' கீறிட்ட இடத்தை நிரப்பு பார்க்கலாம்.


மாணவன்: சம்பள உயர்வுவரும் பின்னே''

⊡ ⊡

நண்பர்: எல்லாரையும் போல நீயும் வெளிநாட்டுக்குப்போனுல் ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்கலாமே. போகவில்லையா?

அன்பர்: காலம் போகிற போக்கைப் பார்த்தால் இங்கேயே அப்படி ஒரு நிலைமை வந்தாலும் வரலாம். அதனுலே நான் போகவிரும்பவில்லை.

⊡ ⊡



விலைவாசி: நீங்கள் உயர்ந்ததால் தானே நாங்கள் உயர்கின்றேம்.

சம்பளம்; இல்லை! இல்லை!! நீங்கள் உயர்ந்ததால்தான் நாங்கள் உயரவேண்டி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருதங்கத்தின் மௌனம்

மிருதங்க மாமேதை சங்கீத கலாநிதி பாலக்காட்டு மணி ஐயரின் மறைவு கர்நாடக சங்கீத உலகத்திற்கே இந்த நூற்றுண்டின் பேரிழப்பு எனக் கூறிஞல் மிகையாகாது. எமது நாட்டில் தவில் மாமேதை தட்சணுமூர்த்தியின் மறைவு எப்படிஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியதோ அதேபோல் பாரத நாட்டில் என்றுமே நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தை 'விட்டுவிட்டு மணியவாள் மறைந்து விட்டார். அவருடைய சங்கீத ஞானத்திற்கேற்ற அடக்கமும் பண்பும் உடையவராகத் திகழ்ந்தாலும் சிலர் அவரை தப்பாகக் கணித்து ஓர் அகம்பாவம் உடையவர் என இந்தியாவில் வித்துவான்களும் ரசிகர்களும் கூறியதை நான்அறிவேன். ஆனல் நெருங்கிப் பழகியவர்களுக்கு அவரது குழந்தை உள்ளமும் ஆழ்ந்த சிந்தனையும் புலனுடும் சிலகாலம்A. I. R. அல் மிருதங்கம் வாசிக்க மறுத்து வெளிக்கச்சேரிகளிலும் ''மைக்" இல்லாத கச்சேரிகளில் மாத்திரம் வாசித்து வந்தார். இதன் காரணத்தைப் பலர் அறியார். மைக் மூலம் போலி சாரீரங்களைவைத்து பாடுபவர்களை ஊக்குவிக்கப் படாது என்பதே இதற்குக் காரணம். அரியகுடி, ஜி. என். பி, ஆழத்தூர், மதுரை மணி, போன்றவர்களுக்கு மணியின் பக்கவாத்தியம் என்ருல் அந்தக்கச்சேரிக்கு தனி மௌசு உண்டு. பைரவி, ராக விரிபோணி வர்ணத்தை மிருதங்கத்தில் வாசித்தவர் என்று இந்தியாவில் இவரைப்பற்றி பெருமையாகக் கூறுவர். அவரது வாத்தியத்தில் எழுந்த இனிய நாதமும், விறுவிறுப்பும் பக்க அனுசரணையும் லயப்பிடிப்பான மொகராக்களும் ரசிகர்களை மெய் மறக்கச் செய்தன. அவருடைய சிஷ்யர்களுள் இன்று குறிப்பாக உமையாள்புரம் சிவராமன் காரைக்குடி மணி, பாலக்காட்டு ரகு குறிப்பிடத் தக்கவர்கள். அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

ரஞ்சனி

# சிந்தனையும் செயலும்

''ஐயா, சிவாயநம வென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை என்கிருர்களே. 'சிவாயநம' என்று சொல்லிக் கொண்டே ஆயிரம் வால்ட் மின் சாரத்தைத் தொட்டால் அபாயம் ஏற்படாதா?

''நல்லது — அபாயம் ஏற்படத்தான் செய்யும்.

''கொஞ்சம் அறிவோடு ஆராய்ந்தால் விஷயம் விளங்கும்.'

''அந்தப் பாடலைப் பாடிய அடியவர் 'சிவாயநம' வென்று மின் சாரம் தொடுவார்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை' என்றுசொல்ல வில்லையே... சிந்தித்திருப்பார்க்கு என்றுதானே சொன்னுர்?''

கண்ணதாசன்

# படித்த கதைகளில் பிடித்தஉவமைகள்

- மாப்பிளை வெங்கடேஸ்வரன் என்னை இமைக்காமல் பார்ப்பது எனக்குத் தெரிந்தது. கொஞ்சம்கூட லஜ்ஜை இல்லாத பார்வை. அடித்துச் சாப்பிடப்போகும் கோழி எவ்வளவு கிலோ தேறும் என்று பார்ப்பதுபோல் ஒரு கணிப்பு அந்தப் பார்வையில் தெரிந்தது.
- எங்கள்தொகுதி எம். எல்.ஏ ஒரு 'மாதிரி' அரசியல்வாதி. மார்டன் பெண்களின் லோகட் ஜாக்கட்டுக்கும் ஹிப்ஸ்டர் சேலைக்கும் நடுவேயுள்ள இடைவெளிபோல் அரசியலுக்கும் நேர்மைக்கும்பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ள இந்த ஜனநாயக நாட்டில்.
- தாயின் ஒப்பாரிச்சுருதி விலைவாசிபோல் உயர்ந்தது.
- அப்ளாஸ் வாங்குவதற்கு மேலே தூக்கிப்போட்டகடம் தலையில் விழுந்து நொருங்கியது போல் இருந்தது அவர் நிலை.


பஞ்சாலாத்தி

அடுத்த இதழில்...

கவியரசர் கண்ணதாசன்

பற்றிய ஐவரின் ஐங்கோண நோக்கு இடம்பெறுகிறது...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தர வாழ்வு

ராஜாஜி என்று மதிப்போடு அழைக்கப்படும் சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் தனது பிறந்தநாளைக்கொண்டாட விரும்பாதவர். தன் அபிமானிகளுக்கு தன்பிறந்த நாளை தெரியாது என்று கூறுவாராம்.

நேருஜி கூட ''நான் பிறந்ததினத்தைக் கொண்டாட விரும்புவதில்லை. காரணம் அந்தத்தினங்கள் நமக்கு வயது போய்க்கொண்டிருப்பதை நினைவுறுத்தும் தினங்கள்' எனத்தனது வாழ்க்கைச் சரிதத்தில் எழுதியுள்ளார்.

நானும் இப்பெரியார்களின் கருத்துள்ளவன்தான். ஆனால் என் கருத்துக்கள் நான்கட்டிய மனைவியின்முன் உருக்கொள்வதில்லை, அன்று என்பிறந்தநாள் என்னை என் தர்மபத்தினி ஊரிலுள்ள கோயிலெல்லாம் இழுத்துச் சென்று என்பெயரில் அர்ச்சனை செய்வித்தாள். என்னை விபூதி சந்தனம், குங்குமம் ஆகியவற்றால் அபிஷேகம் செய்தாள்.

பிறந்த தினத்தன்று சாமிக்கோலத்தில் காட்சியளித்தேன். அத்தோடு அவள் ...'நீங்கள் ஒரு காட்டுப்பூனை. மாமிச வாடையின்றி மனது திருப்திப்படாதவர். மனிதனாகப் பிறவி எடுத்தபடியால் பிறந்த தினத்தன்றாவது மனிதப் புனிதனாக இருங்கள். இன்று கீரை, பருப்பு, கத்தரிதான்" என்று என் நாவையே கத்தரித்துவிட்டாள்.

எனக்கு கன்னிகாதானம் செய்த என் மாமனாராகிய தர்மவான் என்னை முற்றும் உணர்ந்த உளப்பாங்காளர். ''புகழுக்காகவாழும் ஓர் அற்பஜீவி அவர் ஒரு கலைஞர் கலைக்காக கொடுத்த சீதனத்தை கலைத்தவர்'' என என்னைப்பற்றி கிண்டலாகத் தனது நண்பர்களுக்கு கூறியிருக்கிறார்.

அவர் ஒரு 'Practical Man' என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எனது பிறந்த தினத்திற்கு அவர் 'சூட்லெந்த்' அனுப்பவில்லை, ஷோ கேஸி'ல் வைக்க காட்சிப்பொருட்கள் அனுப்பவில்லை, கடிகாரமோ... ஸ்கூட்டரோ... ஊஹூம்... என் குடும்பத்தின் வயிறுகடிக்காமல் இருப்



பதற்காக நாலுமூட்டை நெல் அனுப்பியிருந்தார்.

—எனினும் அவர் அனுப்பிய அன்பளிப்பு என்னை ஆனந்தத்தில் ஆழ்த்தவில்லை.

—என்னைச்சுற்றி நண்பர்கள் அனுப்பிய அன்பளிப்புப் பரிசுகள் குவிந்து கிடந்தன. அவைகளாலும் மனத்தில் குதூகலம் ஏற்படுத்த முடியவில்லை.

—சில பிரபலஸ்தர்கள், உயர்பதவியிலுள்ள நண்பர்கள் வந்து ஆசி கூறினார்கள்,

—நான் ஈனஸ்வரஸ்தாயியில் நன்றி கூறினேன் ஆயினும் மனதில் நிறைவுஇல்லை.

—பாடசாலையால் வந்த சின்ன மகள் ஓடிவந்து முத்தங்கள்தந்து ''அப்பா நான் உங்கள் பிறந்த தினத்திற்குத் தரும்பரிசு எனது 'புரோகிரஸ் றிப்போட்' நான்தான் எனது வகுப்பில் முதலாம் பிள்ளை" என்று குறித்து மகிழ்ச்சி வழியக்கூறினாள்.

—எனது மகளின் சாதனை கூட அந்த நேரத்தில் மனதில் நிறைந்திருந்த வேதனை... மகிழ்ச்சியை காட்டவிடாது சோதனை செய்தது.

—மூலையிலிருந்து என்னை அவதானித்துக் கொண்டிருந்த என் திருமதி முனகினாள் ''மீனில்லாத நாட்களில் இந்தக்கொக்கு இப்படித்தான் வாடிப்போயிருக்கும். என்று எல்லோரும் சிரிக்கக் கூறினாள்.

—எனக்கு எரிச்சலாக இருந்தது.

—என்மனக் குமுறலை நான் எப்படி நாலுபேர் முன்னே விளக்குவது.

—வாழ்த்துப் பத்திரங்களுக்கிடையே 'முழுசி'க் கொண்டு கிடந்த கடிதம் ஒன்றே என்கடின நிலைக்குக்காரணம்.

—அதில் கிடந்தது இதுதான்.

''சென்ற இதழில் வெளியான உமது சுந்தரவாழ்வை'ப் பாராட்டி ஒருகடிதம் கூட வரவில்லை — முந்திரிப் பருப்பு, முந்திரி வற்றல் எல்லாம்போட்டு நல்ல ஹாஸ்ய பாயாசமாக அடுத்ததை எழுதுங்கள் இல்லையேல் பிரசுரத்திற்கு ஏற்கமாட்டோம்

**சிவந்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்போம்- இனிவருவதை யாவது யாராவது பாராட்டு கிறார்களாவென்று''.

இப்படிக்கு
ஆசிரியர் சிரித்திரன்

—பிறந்தநாள், ஜுரம் பிடித்த நாளாகச் சப்பென்று இருந்த தற்கு எனது இந்தப்படைப்பு பிரசுரத்திற்கு ஏற்கப்படாமல் போய்விடுமோ என்ற அச்சத் தால்தான்.

—என்னசெய்வது? என்மாமனார் கூறியதுபோல் புகழுக்காகவாழும் ஓர் அற்பஜீவிதானே நான்?



● நீங்கள் எழுதிய கதை நன் றாகத்தான் இருக்கிறது, ஆனால் 'தூக்கி வாரிப்போட் டது' என்ற சொல்லை அடிக் கடி கையாண்டிருக்கிறீர்களே வசனங்களில் ஏன்?

☐ இந்தக்கதையை ஓடிக் கொண்டிருந்த ஒரு மினிபஸ் ஸிற்குள் இருந்து எழுதி னேன் அதுதான்,

❋ ❋

● உங்கள் வேலைக்காரன் ஏன் இப்படி திண்ணைஅதிரகூடம் ஆட வேலைசெய்கிறான்?

☐ கூடமாட வேலைசெய் என் றேன் அவனிடம் அதுதான்.

ச. ரா. பா.

# 'பா'யாசம்

## இயமன்!

பாஸ்போட்விசா
இல்லாமலேயே
பரலோகம்
பறப்பதற்கு
எருமையிலேயொரு
'ஏஜென்ஸி' தயார்!

## பரிணமம்!


பலங்களின்
தம்பட்டம்
'பலவீனம்' ஆனது!

## நிஜம்

விரும்பும் ராகங்கள்
வீணையில் இருந்தால்
விவாகரத்துக்கே-
அவசியம் இல்லை!

## சுவீகாரம்

எந்த-
நாட்டில்
எழுத்தாளர்கள்
ஏற்றம் பெறுகின்றார்களோ
எந்த நாட்டில்
கலைஞர்கள்
கௌரவிக்கப்படுகின்றதோ...
அதுவே—என்
'தாய் நாடு'



அன்பு நெஞ்சன்

● வீட்டிலே உங்கள் மனைவி ஏன் முகாரிராகம் பாடுகிறாள்

☐ சங்கராபரணம்பார்க்கவேண் டும் என்றுதான்.

● ?...?...?

ச. ரா. பா.

# தமிழர் வாழ்வில் வலது பக்கம்

தமிழர் வாழ்வில் வலதுபக்கம் பெரும்பங்கு கொண்டுள்ளது. வலது கையால் சாப்பிடுவது, எழுதுவதிலிருந்து இப்பழக்கம் ஆரம்பமாகிறது. அ. எழுதத் தொடங்கும்போதே வலது புற மாகஅழித்தே தொடங்குகிறோம்.

இடது கை, கால் ஊனமானவர் களைக்கூட 'வலது' குறைந்தவர் கள் என்று கூறுவதைக் கேட்டிருப் பீர்கள்; புதிதாக ஒருவீட்டுக்குச் செல்லும்போதும் திருமண வைப வத்தின்போதும் வலது காலை எடுத்து வைத்துச் செல்வதே மரபு.

திருமணத்தின்போது தீ வலம் வருதல் திருவிழாக்களின்போதும் விழாக்களின்போதும் வீதிவலம் வருதல், அரசன் மக்களைக்காக்க நகர் வலம் வருதல்போன்ற காரி யங்கள் வலது பக்கத்திற்கும் தமி ழருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை வலுப்படுத்து கின் றன,

அகளங்கன்

# தரா-தரம்

உயர்நிலைப் பள்ளிப் படிப்புடன் கல்வியை முடித்துக்கொண்டவர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளி யப்பா. மழைக்குக் கூட கல்லூரி யில் ஒதுங்கியதில்லை. ஆயினும் இப்போது M. A. வகுப்பு மாண வர்களுக்கு இவருடைய 'மலரும் உள்ளம்' கவிதை நூல் பாட நூலாக்கப்பட்டிருக்கிறது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் Phd பட்டம்பெற இவரது நூல் அனைத்தையும் ஆராய்ந்து வருகி றார் ஒரு பெண்மணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாகவி பாரதி
## நூற்றாண்டு விழாச்
# சிறுகதைப் போட்டி

- மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவினை யொட்டி 'சிரித்திரன்' அகில இலங்கை ரீதியில் சிறுகதைப் போட்டியினை நடாத்த முன்வந்திருப்பதை எழுத்தாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

**பரிசு விபரங்கள்**

அடுத்த இதழில்

**நிபந்தனைகள்**

- எவரும் கலந்து கொள்ளலாம் — ஒருவர் எத்தனை கதையும் அனுப்பலாம் - ஆனால் ஒருவருக்கு ஒரு பரிசுதான் வழங்கப்படும்.
- கதைகள் சிரித்திரனில் 4 பக்கங்களுக்குமேல் போகா திருத்தல் நல்லது.
- முடிவு திகதி **31-1-1982**
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதிமுடிவு.


- வானவில் வண்ணங்களில் அழகுக்கலை கொஞ்சும்

ஆவுளித்திணிசுகளின் — களஞ்சியம்

**சிங்காரம்ஸ்**

- நவநாகரீக தங்க, வைர நகைகளின் — தேர்வுச் சுரங்கம்

**டைமா நகைமாளிகை**

செட்டியார் தெரு,
கொழும்பு.
தொலைபேசி: **20785**

**நூலறிவுடையோர் நுண்ணறிவுடையோர்**

நுண்ணறிவுடையோர் கலைத்திறன் மிக்க தையல் வேலைகளுக்கு தேர்வுசெய்வது

**முயல்மார்க் நூல்களையே!**

தயாரிப்பாளர்

**சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பனி.**

கொழும்பு — 12


அடுத்த

இதழில்



அடுத்த இதழில் சிரித்திரனுக்குச் செவ்வி தருபவர்

**செல்வி ஆனந்தராணி இராஜரட்ணம்**

அவர்களாகும். கலையுலகில் தனித்துவமான இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள அவரின் இனிய செவ்வியை படித்து மகிழுங்கள்.

---

**சிரித்திரன் சிரிப்பு வட்டம்**
அல்வாய் தெற்கு,
அல்வாய்

அன்றும், இன்றும், என்றும் இடைவிடாது தொடர்ந்து எங்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் 'சிரித்திரன்' 13-10-1981 ஆம் திகதி இரவு இலங்கை வானொலியில் ''கலைக்கோலம்'' நிகழ்ச்சிமூலம் மென்மேலும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கடித்தது.

'சிரித்திரன்' அள்ளித்தரும் விஷயதானங்களும் விஷேடமாக, அட்டைப்படம், ஊஞ்சல், சித்திரகானம், மைனர் மச்சான், சவாரித்தம்பர், மெயில்வாகனத்தார், Mrs. டாமோடிரன், ஒய்யப்பங்கங்காணி, குருநகை. மகுடி மற்றும் சிரிப்புக் கதைகள், சிந்தனைக் கட்டுரைகள் யாவும் திருமதி அன்னலட்சுமி இராசதுரை அவர்கள் கூறியதுபோல் சிரித்துச்சிந்தித்து வாழவழிகாட்டுகின்றன.

எங்கள் சிந்தனைகளைத் தூண்டிச் சிரிக்க வைத்துக் கொண்டே இருக்கும் 'சிரித்திரன்' என்றும் சிறப்புற்றுப் புகழ்பொங்க வாழ்க! என வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

சிவபாதராஜா குமுதினி
சற்குணராசா ஞானபவானி
வைத்திலிங்கம் நிலாமதி
ஆனந்தவடிவேல் ரதிகலாதேவி
கு. சிவபார்தமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேனு நண்பர் பகுதியில் உங்கள் பெயரும் இடம்பெற வேண்டுமானல் கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபாலட்டையில் ஒட்டி அனுப்பவும்.

● Kumar Benjamin — Age 25
M/V ENATON
Hellenic - Shipping.
53, Filongs st. Piraevs - Greece

★ பத்திரிகை, நண்பர், சுற்றுலா, ஈழம்பற்றி அறிதல்

❋ ❋

● S. L. M. Mu taff — Age 23
☐ P. O. Box 1639
Madina - Saudi Arabia
Driver

★ நண்பர், டூரிங் தொடர்பு.

❋ ❋

● சி. கனகராச் — வயது 28
விற்பனையாளர்
ஸ்ரீ. கிரன்ஸ்
கண்டி வீதி, கிளிநொச்சி

☐ பத்திரிகை, நண்பர்தொடர்பு.

❋ ❋

● இராசையா - மதி — வயது 20
மாணவன்
இராசவாசல், 159/3 நொர்த்தாரிஸ் வீதி
அரியாலை, யாழ்ப்பாணம்.

☐ பற்மின்டன்

❋ ❋

● நாகமணி மகேந்திரலிங்கம் — வயது 27
விவசாயம்
கப்பண்டா கடவை வீதி, சங்கானை,

☐ வானொலி, T. V. பத்திரிகை, சினிமா, நண்பர் தொடர்பு.

❋ ❋

● D. L. அபூ அஸ்றப் — வயது 14
மாணவன்
68, சின்னப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று-3 (கி.மா)

☐ வானொலி, கதை, கட்டுரை, முத்திரை சேர்த்தல்.

❋ ❋

● S. சோதிநாதன் — வயது 20
மாணவன்
பத்திரகாளி கோவிலடி, பொலிகண்டி, வல்வெட்டி

☐ பத்திரிகை, வானொலி திருத்தல், நண்பர்தொடர்பு

❋ ❋

● செ. தேவேந்திரா — வயது 26
இ. போ. ச லிகிதர்
'செல்வபதி' சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

☐ வானொலி, பத்திரிகை, சிறுகதை, நண்பர்.

❋ ❋

● K. S. பாலா — வயது 19
மாணவன்
மீசாலை வடக்கு, கொடிகாமம்

☐ சித்திரம், பத்திரிகை, வானொலி, சிரித்திரன், புத்தகம்.

❋ ❋

● பகீரதன் — வயது 18
மாணவன்
காலையடி, பண்டத்தரிப்பு

☐ எழுதல், ஓவியம், வானொலி, சினிமா, இலக்கியம்

❋ ❋

● இ. கணேசலிங்கம் — வயது 20
விவசாயம்
கொந்தக்காரன் குளம், ஓமந்தை

☐ வானொலி, நண்பர், பத்திரிகை

❋ ❋

● M. J. M. ஸித்தீக் — வயது 21
வியாாரம்
9 மரிக்கார் பிளேஸ், மருதானை பேருவலை

☐ கதை, பத்திரிகை, டி. வி.

❋ ❋

● ப. ஜெயானந்தன் — வயது 15
மாணவன்
தெய்வேந்திரா தியட்டர் வீதி, நெடுங்கேணி

☐ வானொலி, பத்திரிகை, சித்திரம், நாவல்.


**சிரித்திரன் பேனு நண்பர்கழகம்**

பெயர்..............................................
விலாசம்..............................................
..............................................
வயது......... தொழில்..............................
பொழுதுபோக்கு..............................
கையொப்பம்..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இ: 3



பெயர்..........................................................................

முகவரி........................................................................

..........................................................................

- சரியான விடைதரும் அதிஷ்டசாலிக்கு முதலாவது பரிசாக ஒருவருட சிரித்திரன் அன்பளிக்கப்படும்.
- இரண்டாவது பரிசாக ஆறுமாத சிரித்திரன் அன்பளிக்கப்படும்.
- விடைகள் யாவும் **20-11-1981** ற்கு முன்பு குறுக்கெழுத்துப்போட்டி, ஆசிரியர் சிரித்திரன் 559. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
- கூப்பனின்றி அனுப்பப்படு விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

### மேலிருந்து கீழ்

1. முன்னைக்காலத்திலே அரசர்கள் நடத்திய சிறந்த யாகம் இது.
2. தாய்மார் பாலைச்.........அவசியம்!
3. கல்யாண வீட்டில்.........அலங்காரத்தைச் சொல்லவும் வேண்டுமோ?
4. சிலர் எப்போதும் மற்றவர்களின்............பற்றியே எண்ணிக்கொண்டிருப்பார்கள்!
6. பாரதகால...........யுத்தம் பார்க்கப் பரவசமூட்டும்.
7. தானங்களுள் அதிமேலான தர்மமல்லவா இது.
10. கட்டியவன்.........ஆனாலும் பாதுகாக்க வேண்டியவள் மனைவி!
11. சீதனம் இல்லாமல் இது ஆவது ஏட்டளவில்தான்.
12. ஆராய்ச்சியாளர்கள் ஒரு விஷயத்தின் ........எப்படிப்போகிறது என்று கவனிப்பார்கள்.
15 எப்போதும் இது அலங்காரமாக இருப்பதைப் பெண்கள் விரும்புவார்கள்.

### இடமிருந்து வலம்

1. வில்வித்தைக்கு உலகத்திலே பேர்பெற்றவன் இவன்
3. இது அசைந்தசைந்து செல்லும்!
4. இதில் பலவிதங்கள் உண்டு
5. சிலர் எப்போதும் இப்படிப் பேசுவார்கள்
6 எதையும் வெல்ல இது வேண்டும்.
8. சிலர் எதற்கும்........இயல்பாகும்!
9. கெட்டிக்கார மாணவர் விடையெழுதும் போது ........ஏற்படுவது சகஜம்!
10. ............தான் கூர்மையாக இருக்கவேண்டும்.
11. ஒருகையில் ஐந்துதானே இது.
12. நல்........யின் பயனே பெறுபேறு.
13. ......வை ஒருநாளும் மறக்கவேண்டாம்
14. உலகம் உய்வதாயின்...........பொய்க்கக்கூடாது!
15. விழாக்களைச் சிறப்பிக்கச்........வைத்து அலங்கரிப்பார்கள்.
16. .........கருதாத உதவியே உலகத்தில் மேலானது.

- கடந்த மாதக் குறுக்கெழுத்துப் போட்டியில் எவருமே முழுவதும் சரியான விடையை எழுதவில்லை—

□ இருபிழைகளுடன் வந்த கீழே குறிப்பிட்டுள்ளோரின் விடைகள் பாராட்டைப் பெறுகின்றன—

| | |
|---|---|
| வ. க. துரைராசா | இளவாலை |
| ம. சுபாஸ் | கரவெட்டி |
| பா. முரளீதரன் | யாழ்ப்பாணம் |
| இ. கருணாநிதி | சுன்னாகம் |
| செ. ஜெகதீஸ்வரி | ஏழாலை |
| க. சித்திரா | யோகபுரம் |
| சி. வேல்வேந்தன் | வேலணை |

- சென்ற இதழின் சரியானவிடைகள்

**மேலிருந்து கீழ்**

1. திசை 2. வண்மை 3. வடிடை 4. கம்பம்
5. நாநிலம் 6. அடிமை 7. தண்டவாளம்
8. சட்டம் 9. பத்மாசனம் 11. கருமம்
14. சுவ 15. வைகை

**இடமிருந்து வலம்**

1. திருவள்ளுவர் 5. நாம் 6. அமைதல் 8. சநிப
9. படி 10. வாசகம் 12. சம்பள 13. உரு
14. சுவை 16. உவகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரை சேராத ஓடங்கள்

அன்றைய தினசரியில் பெரிய சிவப்பு எழுத்துக்களில் தலையங்கச்செய்தி வெளியாகி யிருந்தது. இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்தபடி விறைத்து நின்றஅவன், தலையை மட்டும் முன்னால் சரித்து மேசைமீது கிடந்த பத்திரிகையைப் பார்த்தபடி நின்றுகொண் டிருந்தான். நூலகத்தின் செய்தித்தாள் பிரி வில் வாயிலுக்கு அருகில், நின்றிருந்த அவ னது பிடரி குறுகுறுத்தது. கண்கள் பத் திரிகை மீது இருந்தாலும், அவனது கவன மும் புலன்களும் நூலகத்தின் உள்ளே வருபவர்கள் மீதே லயித்திருந்தது.

பொறுமையின்றி அந்த காலடி ஓசைக் காக காத்திருந்தான்.

பரக்... சரக்... காலடி ஓசை ஒன்றுகேட் டது.

அவனது உள்ளம் சிலிர்த்தது. உணர்வு கள் படபடத்தன.

காலடி ஓசை நேராக பிரதான மண்ட பத்துக்குள் தேய்ந்து மறைந்தது. அவனது உள்ளம் தொய்ந்தது. சோர்வோடு கடி

**பி. மாணிக்கவாசகம்**

காரத்தைப் பார்த்தான் — ஒன்பது மணி பத்துநிமிடங்கள் அவன் நூலகத்திற்கு வந்து பத்து நிமிடங்கள் கழிந்துவிட் டன.

அவள் வரமாட்டாளோ?... சீ... எனக்குப்பின்னால் அந்த ரெண்டுபேரும் வராட்டில் குளத்தடியில அவளைக்கடந்து வந்தபோதே, லைப்ரரிக்கு வரச்சொல்லி சொல்லியிருக்கலாம். இப்போ என்ன செய்யிறது?... எப்படியும் அவள் வருவாள்... இண்டைக்கு வராமல் போகமாட்டாள்... ரெண்டுநாளா அவளைக் கண்டும் கதைக்க ஏலாமல் போனது அவளுக்கும் தெரியும்தானே... சரி, தற்செயலாய் வராட்டில்...? வராட் டில்...? வரரட்டில் என்ன செய்யிறது?

—அவனது உள்ளம் அலைமோதி தடுமாறிக்கொண்டிருந் தது.

காலை நேரமானபடியால் நூலகத்தில் அதிக கூட்ட மில்லை. செய்தித்தாள் பிரிவில் அவனோடு அந்த வரிசையில் நால்வர் மட்டுமே இருந்தார்கள். உள்மண்டபங்கள் இரண் டிலும் ஏதோ வேலைநடந்து கொண்டிருந்தது.

சரக்... சரக்... காலடிஓசை —அவனது புலன்கள் விழித் துக் கொண்டன.

கிளிக்...!குடையைச் சுருக்கிய ஓசை... அவனது உள்ளம் துள்ளியது. வாயிலில் இருந்த மேசைமீது குடையை வைக் கும் ஓசை தெளிவாகக் கேட்டது. மார்பு துடிக்க, பல்லைக் கடித்துக்கொண்டு திரும்பிப்பாராமல் கூர்மையாக்கி நின்றான்.

காலடி ஓசை செய்தித்தாள் பிரிவினுள் நுழைந்து அவ னுக்குப் பின்னால் எதிர்ப்புறமிருந்த ஆங்கில செய்தித்தாள் மேசைக்குச் சென்றது.

அவனது உணர்வு சில்லிட்டு முள்ளந்தண்டு விறைத்தது. சற்றே அசைந்து விழிக்கோணத்தில் பார்த்தான்—


அவளேதான். கண்ணைப் பறிக்கும் சிவப்புச் சட்டை. வெளிறிய மஞ்சள் நிறத்து மினிகவுண் முழங்கால்களை மூடித் துவண்டிருந்தது.

சிலகணங்கள் பத்திரிகையின் முகங்களை சாட்டுக்கு ஓசை எழப் புரட்டிவிட்டுத் திரும்பி அவளை நன்றாகப் பார்த்தான் அவளும் செய்தித்தாளை மூடிவிட்டுத் திரும்பினாள். இருவரும் ஒருவரை ஒருவர் விழுங்கி விடுவதுபோல பார்த்துக்கொண் டார்கள்.

அந்த அழகிய மூக்கில் ஒற்றைக்கல் மூக்குத்தி ஒன்று பளபளத்தது. தங்க பிரேம்போட்ட கண்ணாடி அந்தவட்ட முகத்துக்கு மெருகூட்டியது. அந்தக் கண்களைச் சந்தித்து எத்தனை வருடங்கள்...? அந்த பெரிய விழிகள்... அதே பார்வை...! அப்பாடா... அவனது உள்ளம் விம்மித்தணிந் தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு டாக்டர்: நான் நோயாளிகளைத் தெய்வமாக நினைத்து நடப்பவன்.

மற்ற டாக்டர்: நான் நோயாளிகளைத் தெய்வமாகவே ஆக்குபவன்.

சு.ரா.பா

# தேர்தல்



- ● தேர்தலில் சில வாக்குறுதிகளைச் சொல்லி வெற்றிபெற்றுவிட்டேன். இப்போ அவைகள் என்னவென்பதை மறந்துவிட்டேன்,
- ☐ கவலைப்படாதீர்கள். உங்களுடன் போட்டியிட்டுத்தோல்வியடைந்தவர் ஞாபகம் வைத்திருக்கிறார் கேட்டால் தெரிந்துவிடும்.

வெளியேறிச் சென்ற அவன் நூலக முற்றத்தில் அவனுக்காகக் காத்திருந்தாள். சைக்கிளை எடுத்துக் கொண்டு அவளை நெருங்கினான்.

''இண்டைக்கு ரெஃபரன்ஸ் செக்ஷன் இல்லையா...? அவர்கள் தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து உறவை வளர்த்துக்கொண்டது அங்குதானே?

''இல்லை, நூலக வாரத்துக்காக எல்லாம் ஏரேஞ்ச் பண்றாங்கள்''

அவள் முன்னால் செல்ல, அவளைத்தொடர்ந்து கேட்டிற்கு வெளியில் வந்து சைக்கிளில் ஏறினான். இருவரும் நகரசபை பக்கமாக செல்லத் தொடங்கினார்கள்.

''கடிதம் கிடைச்சுதா?'' அவன் கேட்டான்.

''எந்தக் கடிதம்... யார் போட்டது...?''

''போனமாதம் 14ம் திகதி போட்டேனே... அது!"

''எனக்கு ஒரு கடிதமும் வரேல்லை. கடிதம்போட்டால்தானே வாரதுக்கு," முகத்தை நீட்டிப் பிடித்துக் கொண்டு விரைப்பாக நடந்தாள்.

—'ஓகோ... கடிதம் கிடைக்காததால் தான் அண்டைக்கு ரோட்டில கண்டபோது என்ர கேள்விக்கும் மறுமொழி சொல்லாமல் அவ்வளவு கோவத்தோட போனாய்போலை கிடக்கு...''

'உன்ர கடிதம் எனக்கு சனிக்கிழமை கிடைச்சுது மறுநாளே நான் பதில்போட்டேன். திங்கள் அல்லது செவ்வாய் உமக்கு கிடைச்சிருக்க வேணுமே...?

''செவ்வாய்க்கிழமை மத்தியான ரெயின்லதானே அங்கேயிருந்து வந்தனான். கடிதம் போட்டிருந்தால் எனக்கு கிடைச்சிருக்குமே... என்ன எழுதினீங்கள்?

''இந்த வாரம் எனக்கு வரவசதியில்லை. நீர் வவனியாவுக்கு வரேக்கை சந்திக்க விரும்புகிறேன். எண்டு எழுதினன்'' ...இனி யாழ்ப்பாணத்துக்குப் போக இல்லையா?

''அங்கே இனி என்ன வேலை?''

''...ஏன்... படிப்பெல்லாம் முடிஞ்சுதா?''

''ஓ... அது முடிஞ்சு ஒருமாதம்''

நகரசபை மைதான கேட்டருகில் வந்ததும் சிறிது தயங்கினாள். இடதுபக்கம் சென்ற செம்மண் ஒழுங்கையில் இறங்கி நடந்தாள். அவனும் தொடர்ந்தான்.

''படிப்பு முடிஞ்சதும், இனிமேல் யாழ்ப்பாணம் போகாததும் எனக்குத் தெரியாது... விபரமாக எழுதியிருக்கலாமே...''

''அதுதான் முதல் கடிதத்தில் எழுதினேனே..."

''அந்தக் கடிதம் தான் இன்னும் கிடைக்கவில்லை விசாரிச்சனான். ஏதோ குளறுபடி நடந்திருக்கு...ம்... இனி என்ன யோசினை... வேலைக்கு ட்ரை பண்ணேல்லையா?

''இவ்வளவு சிலவழிச்சு படிச்சுப்போட்டு சும்மாவா இருப்பாங்கள். ஏதேனும் வேலைய பார்க்கவேண்டியது தான்.''

''அது போகட்டும். இப்போ உம்முடைய முடிவு என்ன?''

''முடிவென்ன... கிடைக்கிற வாழ்க்கைய ஏற்றுக் கொண்டு வாழ்றதுதான்.

''அப்படியெண்டால் எங்கட முடிவுகள், தீர்மானங்கள் எல்லாம்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எல்லாம் மறந்தாச்சு...''

''அவ்வளவு லேசாகவா...?''

''நாலு வருசங்கள்... எல்லாமே மறந்திட்டன்''

''ஏன் அப்போ கடிதம் எழுதினீர்...?''

''இதற்கு ஒருமுடிவு காணத்தான்''

''என்ன முடிவு?'' கேட்டுக்கொண்டே சைக்கிளில் இருந்து இறங்கினான்.

ரோட்டுக் கரையில் நின்ற மரத்தின் நிழலில் நின்று திரும்பி அவனைப் பார்த்தாள்.

அதே உயரம். மாற்றமில்லை. உடலில் செழுமை தெரிந்தது. இடையில் ஒருசுற்று பருத்திருந்தாள். அவளது பேச்சில் புத்திக்கூர்மை பளிச்சிட்டது. பட்டப் படிப்பின் விளைவுபோலும்!

'ஷீ இஸ் வைஸ்' அவனது உதடுகள் முணுமுணுத்தன.

பெண்ணொருத்தி அவர்களைக் கடந்து சென்றாள், இருவரும் நடக்கத் தொடங்கினார்கள். சில கணங்கள் மௌனத்தில் கரைந்தன.

'நீர் கெம்பசுக்குப் போனதுக்கப்புறம் விலாசம் தெரிவிக்காமல் சரி கடிதம் போடுவீர் என்று எவ்வளவு நாள் கத்திருந்தன் தெரியுமா? கடிதமே போடவில்லைத்தானே...''

''கெம்பசுக்குப் போறதுக்கு முன் எவ்வளவு பிரச்சினைகள்...'' அந்த நாட்களை ஒருமுறை நினைவில் மீட்டுப் பார்த்தாள். ''அதுகளை இப்போ நினைச்சாலும் அழுகை வருகுது... அம்மா என்மேலை எவ்வளவோ நம்பிக்கை வைச்சிருந்தாள். அந்த நம்பிக்கையை நான் வீணாக்கமாட்டேன் எண்டு சொன்ன பிறகுதான் என்னை கெம்பசுக்குப் போகவிட்டா... இப்பவும் வீட்டையிருந்து வெளிக்கிட்டால் எத்தினை மணிக்கு திரும்பிவருவேன் எண்டெல்லாம் கேட்டுப்போட்டுத்தான் போக விடுவா இண்டைக்கும் நான் அக்காவின்ர முகத்தைப்பார்த்து கதைக்கிறதில்லை. எங்க பிரச்சினையைப் பற்றி அம்மாவுக்கு நீங்கள் எழுதின பிறகு அக்கா என்னைப் படுத்தின பாட்டை இன்னும் என்னாலை மறக்க ஏலாது... தங்கச்சிமார் ரெண்டு பேருக்கும் கல்யாணம் முடிஞ்சுது. அவங்களின்ர குடும்பத்திலேயும் கனபிரச்சினைகள்... அவையளின்ர உதவியால தான் நான் கெம்பசுக்குப் போய்வர முடிஞ்சது. எங்களின்ர முடிவை வீட்டுஆக்கள் ஒருதருமே விரும்பவில்லை.''

''நாங்கள் ரெண்டுபேரும் வாழத் தொடங்கிறதாலை அவங்களுக்கு ஏதும் பிரச்சினை இல்லைத்தானே... ஏன் அதை அவங்கள் எதிர்க்க வேணும்?''

'அவங்கட பேச்சை மீறினால் தங்கச்சிமார் அக்காளவையின்ர குடும்ப வாழ்க்கையில பிரச்சினைகள் கிளம்பும். இந்த நிலைமையில நான் என்ன செய்யிறது...?''

இரண்டுபேர் சைக்கிளில் வந்தார்கள்.


''ஐசே ரோட்டை விட்டு கரையில நடந்து போங்கோவன்...'' இருவரில் ஒருவன் கூறிவிட்டு இருவரையும் திரும்பிப் பார்த்தபடி கடந்து சென்றான்.

சங்கட உணர்வோடு தயங்கி நின்ற அவள் அவனை அளவிடுவது போல பார்த்தாள். அந்த ஆழமான கண்களுக்குள் அவளது உள்ளத்தை துழாவிவிடமுயன்றான்.



● சார்... நான் இப்போ நாடகங்கள் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

❑ தெரியும் என்னிடம் நீ படிக்கும்போது 'மாக்ஸ்' எடுக்க எழுத முடியவில்லை... இப்போ ''கிளை மாக்ஸ்' எடுபட நன்றாக எழுதுகின்றாயே. —வலம்புரிமுத்து



● என்ன உங்க வீட்டிலிருந்து திருடன் ஓடுகிறானே!

❑ நான் புத்தகத்தின் கதை ஓட்டத்தில் மறந்து போயிருந்திட்டேன்.

—நாகபூஷணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வீட்டு ஆக்கள் விரும்ப இல்லை எண்டதைத்தவிர வேறை ஏதும் காரணம் இருக்கா?... அல்லது என்னுடை வாரதுக்குத் துணிவில்லையா?''

''வீட்டு ஆக்களின்ரை எதிர்ப்பைத் தவிர ஒண்டுமில்லை... துணிவைப் பற்றியும் ஒண்டுமில்லை. என்னாலை மற்றவைக்கு ஏற்படுகிற விளைவுகளின்ர கோரம்தான்... அவளது குரல் கரகரத்தது. மார்புகள் பெருமூச்சில் உயர்ந்து தணிந்தன.

அந்தப் பிரச்சினையின் மொத்த வடிவம்...

அதன் விளைவு...

அதன் கோரம்...

அந்த நாலு வருடங்கள். அப்போது நடைபெற்ற சம்பவங்கள் படச்சுருளைப் போல அவளது மனக்கண்ணில் வரிசையாக ஓடி மறைந்தன. அவனது நெஞ்சில் அழியாத வடுக்களாக தழும்பேறிப்போன அந்தப் பழைய சம்பவங்கள் நினைவில் தோன்றின. பச்சைக் காயத்தில் கொதிக்கும் எண்ணெயைக் கொட்டியது போன்ற வேதனை ஒன்று உஸ்ணத்தைப் பிளந்தது. அந்த வேதனையின் வெம்மையை வெளிப்படுத்தி விடுவது போல நீண்ட பெருமூச்சொன்று அவனது நாசித்துவாரங்களை விரித்துக்கொண்டு வெளியேறியது.

டியூஷனில் அவளைச் சந்தித்து, படிப்போடு அவனிடம் அவனது மனதையும் பறிகொடுத்தான். ஒருவரை ஒருவர் உள்ளத்தால் விரும்பி வாழ்க்கையில் துணைவர்களாக இணைவதென இருவரும் தீர்மானித்தபோது... ...அவர்கள் எதிர்பாராதது நடந்துவிட்டது.

அந்தி சாய்ந்த நேரம். இளம் கருக்கலில் பிறையொன்று கீழ்வானில் கண்ணடித்து கொண்டிருந்தது.



● முன்பு கிராமத்தில் அயல்வீட்டுப் பேச்சை வேலியில் காதுவைத்து ரசிப்பாயே! இப்போ நீ நகர்வாசி!

□ டெலிபோனில் அம்பிடும் குறுக்குப் பேச்சை ரசிப்பேன்.

— வலம்புரிமுத்து

ஊரின் ஒதுக்குப் புறம். பற்றைகள் அடர்ந்த தனிமையான இடம். இருவரும் ஏகாந்தமாக உலகை மறந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென அங்கே தோன்றினாள் அவளது தாய்...

இருபதுஇருபத்தைந்து ஏக்கர் காணிக்குச் சொந்தக்காரி. ஏதோ படித்திருக்கிறான் என்று மகளுக்கு டியூஷன் சொல்லிக்கொடுக்கச் சொன்னால்...இந்த அளவுக்கு அவன் முன்னேறுவான் என்று அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. உள்ளம் உடல் எல்லாமே பதறியது அவளுக்கு, டியூஷன் நின்றது. அவளது தோட்டத்தில் செய்துவந்த கூலிவேலையும் பறிபோயிற்று.

அதன்பின் அவளுக்கு (மகளுக்கு) ஏற்பட்ட கட்டுப்பாடுகள், கண்டிப்புகள், தண்டனைகள் — அப்பப்பா அவற்றுக்கு ஓர் அளவே இல்லை.

ஒருமாதம் ஓடிமறைந்தது— ஒருவாறு பள்ளிக்குச் சென்றுவர அவளுக்கு அனுமதிகிடைத்தது... மீண்டும் அவர்களது நட்பு தளிர்விட்டது. அவள் 'ஏ எல்'லையும் எழுதிமுடித்தாள்.

இருவரும் ஒருவரைவிட்டு ஒருவரால் வாழமுடியாது என்ற நிலைமைக்கு வந்தபொழுது... இருவரது முடிவையும் அவளது தாய்க்கு எழுத்தின் மூலம்தெரிவித்தான். அவ்வளவுதான்...

அவள் கொதித்தெழுந்தாள்.

''தோட்டக்காட்டான்... அதுவும் கூலிவேலைக்காரன் ஒருதனுக்கு என்ர மகளைக் கொடுக்கவா...? என்னை ஆரெண்டு நினைச்சான் அவன்? என்னட்டை நாள் கூலிக்கு வேலை செய்யிறவனுக்கும் இப்படி ஒரு எண்ணமா?''

அவளது கொதிப்பின் விளைவாக, இருட்டடிகள்... பகலில் வெருட்டல்கள், மிரட்டல்கள் எல்லாம் அலையலையாக அவனைத் தொடர்ந்தன. ...ஊர்முழுதும் அவனையும் அவனது குடும்பத்தினரையும் ஒதுக்கிவைத்துப் பார்த்தது.

கொந்தளிப்புகளுக்கிடையே அவள் கொம்பசுக்குத் தெரிவாகிச் சென்றாள். அவனோ அந்த ஊரைவிட்டு அயலூரில் சென்று நிரந்தரமாகக் குடியேறினான்.

உழைப்பு ஒன்றையே மூலதனமாகக் கொண்டு, சொந்தக் காணிக்கு உரிமையாளனாகி, சமூகத்தின் படிகள் ஒவ்வொன்றையும் தட்டுத் தடுமாறி ஏறிக்கடந்தான். நேர்மையான உழைப்பு, பொதுச்சேவையில் ஈடுபாடு, கண்ணியமான நடத்தைகள் எல்லாம் ஏன் நினைந்து சமூகத்தில் அவனுக்கு ஓர் இடத்தைப் பெற்றுத்தந்தன. உள்ளத்தின் ஒருமூலையில் அவளது நினைவுகளை எல்லாம் பவுத்திரமாகப் பூட்டிவைத்து நம்பிக்கையோடு காத்திருந்தான்.

நாலு வருடங்களாக அவளுக்காக அவன் காத்திருந்தது வீண்போகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநிகழ்ச்சி ஒன்றில் அவளை மிகவும் நெருக்க மாகச் சந்தித்தான் அவன் ஒருமாதம் கடந்தது. இரண் டாவதுமுறையாக எழுதுகிறேன்... முதல் கடிதத்திற்கு ஏன் பதில்போடவில்லை? என வினுதொடுத்து அவளிட மிருந்து கடிதம் வந்தது,

மனத்தாங்கல்கள், ஏக்கங்கள், துடிப்புகளுக்கிடையே இருவரும் மனம்விட்டுப் பேசுவதற்கான ஒரு சந்தர்ப் பம் இப்போது கிட்டியது...

"இப்பவும் எனக்காகப் பேசியுள்ள இடத்திலை கல் யாணம் முடிக்கச்சொல்லி ஒவ்வொருநாளும் வீட்டு ஆக்கள் எல்லோரும் கரச்சல் குடுத்தபடிதான் இருக் கினம்..."

"உமக்காகப் பேசிய கல்யாணத்தை உடனடியாக நடத்தப் போகினமா?"

"உடனடியாக கல்யாணம் நடக்குமெண்டுசொல்ல ஏலாது. அம்மாவுக்கும் ஏகப்பட்ட கடன், இந்தநிலைமை யிலை என்ன செய்வாளெண்டு சொல்லத்தெரியாது"

"அப்படி எண்டால் கல்யாணம் நடக்கிறதுக்கு இடையிலை உள்ள காலத்திலை ஏதேனும் திருப்பங்கள் ஏற்பட்டால் என்னோடை வர ஆயத்தமா?"

"திருப்பங்கள் எண்டு எது நேர்ந்தாலும் வீட்டு ஆக்களின்ர மனப்போக்கிலை ஏதும் மாற்றம் ஏற்படும் எண்டு சொல்லுறதுக்கில்லையே... என்னைப் படிக்க வைச்சு ஆளாக்கி இந்த நிலைமைக்கு உண்டாக்கினவை யாலை எங்கடை முடிவைச் சீரணிக்க ஏலாது. இப்படி ஏதும் நடந்தால், அவங்கள் அக்கா தங்கச்சியவையின்ர வாழ்க்கையையே உதறிப்போட்டு யாழ்ப்பாணம் திரும் பிப் போனாலும் போயிடுவாங்கள். அந்த அளவுக்கு அவையின்ர வாழ்க்கையில தாக்கத்தை ஏற்படுத்துற அளவுக்கு அவையின்ர வாழ்க்கையில தாக்கத்தை ஏற் படுத்துற அளவுக்கு என்னாலை நடக்க ஏலாத நிலைமை யிலை நான் நிக்கிறன்..." அவளது கண்கள் கலங்கின. அவனது பார்வையைத் தவிர்த்தபடி விரிந்த வெளியில் ஆழமாகப் பார்வையைச் செலுத்தினாள். சற்றே மிதந் திருந்த முன்வரிசைப் பற்கள் பிதுங்கித் திரண்டிருந்த முழுமையான அவளது கீழிதழைக் கௌவிப்பிடித்தன அவளது கண்களிலிருந்து நீர் திரண்டு கன்னங்களில் உருண்டன.

"அப்படியெண்டால்... அவனது குரல்கரகரத்தது.

நீண்டு வளைந்து சென்ற அந்த செம்மண் ஒழுங்கை புகையிரத நிலைய வீதியில் சென்று இணைந்தது. இரு வரும் கதைத்தபடியே ஒழுங்கையின் முடிவை நெருங்கி விட்டார்கள். சந்திக்கு இன்னும் முப்பது பாகங்கள் கூட இல்லை.

அவனை நம்பி ஓடையில் மிதக்கும் "தோணிகளாக கரைசேரக் காத்துநிற்கும் அவனது இரண்டு தங்கைக ளும், அவனது மனக்கண்ணில் தோன்றினார்கள். வித வைத் தாயையும் அவனையும் மட்டுமே பற்றுக்கோலாக



- எனக்கு இந்த சுகாதார இலாகாவையும் டெலி போன் இலாகாவையும் பிடிக்காது,
- ஏன்?
- படுக்கப்போனால் கொசு ஙொய் ஙொய் என்றுகீதம் பாடுது தொலைபேசியை எடுக்கப்போனால் அதுவும் 'ஙொய் ஙொய்' என்று பாடித் தொலைக்குது.

—அதிமதுரம்

நம்பி பளிங்குச் சிலைகளாகப் பவனிவரும் அவர்களது எதிர்காலம் அவனது காலடியில் சுருண்டு கிடந்தது. 'அதனைப் புறக்கணித்துவிட்டு, மனதுக்குப் பிடித்த இவளோடு எங்காவது சென்றுவாழ்க்கை நடத்தலாமா?

"உங்களைப் பிரிந்து என்னால் இன்பமாக வாழமுடி யாது, என்ர நெஞ்சில் கனக்கிற சுமைய என்னால் இறக்கி வைக்கவும் ஏலாம நான் படுகிறபாடு...' மெல் லிய விசும்பல் அவனது கண்டத்திலிருந்து வெளிப்பட் டது.

முள் கொழுக்கியினால் அவனது உள்ளத்தைப்பற்றி யாரோ மிருகத்தனமாக இருந்தார்கள்,

ஒழுங்கையில் ஆட்களின் நடமாட்டம் கூடத் தொடங்கியது. புகையிரத நிலையத்திலிருந்த ரெயிலின் கூவல் சத்தம் கேட்டது.

'இதுபற்றி இன்னும் வடிவா யோசிச்சுப்போட்டு இன்னும் ஒருதரம் உம்மைச் சந்திக்க விரும்புகிறேன்...

இண்டைக்கும் வேறை ஒரு அலுவலாகத்தான் வந் தனான், இனிமேல் சந்திக்க ஏலுமெண்டு நான் நினைக்க இல்லை... கன்னங்களைத் துடைத்தபடி கலங்கிச் சிவந்த கண்களால் அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, நெஞ்சில் கனக்கும் சுமையைச் சுமக்கமுடியாமல் நடந்துசென்று புகையிரத நிலையச்சாலையில் மிதந்தாள்.

சைக்கிள் மீதேறி, வந்தவழியே திரும்பி, செம்மண் ஒழுங்கையில் டயர்கள் சர சரக்க பெடலை மிதித்தான் அவன். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலரசக் கலசம்

## தலைசாய்ந்த சர்வாதிகாரிகள்

**1979**-ம் ஆண்டு உலகின் ஐந்து பெரும் சர்வாதிகாரிகள் தமது பதவிகளிலிருந்து தூக்கிவீசப்பட்டனர். ஈரானில் மன்னர் ஷா, நிக்கரகுவாவில் தலைவர் சோமோசா, உகண்டாவில் இடிஅமீன், மத்திய ஆபிரிக்க சாம்பிராச்சியத்தில் பொக்காசா, ஈக்குவட்டோரியல் கைனுவில் மாஸ்ஸி ஆகியோரே இந்த ஐவருமாவார். இவர்கள் யாவருமே புரட்சி சதியால் பதவி இழந்தோராகும்.

## சிரிப்பும் இறப்பும்

கிறீஸ்துவுக்கு முன் 3ம் நூற்றூண்டில்வாழ்ந்தகிரேக்கரான பைலோமென் என்பவர் ஒரு நகைச்சுவை எழுத்தாளராகும். ஒருநாள்,தமக்காகத் தயாரித்து வைத்திருந்த இரவு உணவை ஒரு கழுதைஉட்கொண்டதைக் கண்டுவிட்டு சிரிக்கத் தொடங்கிய இவரால் சிரிப்பை அடக்கமுடியாது போய்விட்டது. அடக்க முடியாமற்போன அந்தச்சிரிப்பால் அவரது உயிரே அடங்கிவிட்டது. தம் வாழ்நாளில் 97 நகைச்சுவைப் படைப்புகளைப் படைத்து உலகைச் சிரிக்க வைத்த இவர்தமது 97வது வயதில் அடக்கமுடியாத சிரிப்பால் உயிர்துறந்தமையைக் கேட்ட கிரேக்க உலகம் தாங்கொண்ணுத் துயரில் ஆழ்ந்தது.

## மருந்தும்விருந்தும்

ஆயுர் வேத வைத்தியகாலம் தொட்டு இன்று ஆங்கில வைத்தியத்துறை விருத்தி பெற்றுள்ள இக்காலம் வரை 'தேன்' மருத்துவத்துறையில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது.அன்று நாட்டு வைத்தியர்கள் பஸ்பத்தை நோயாளர்களுக்குக் கொடுத்து அதனைத் தேனுடன் கலந்து உண்ணுமாறு பணித்தனர். இன்று சில மாத்திரைகளை தேனுடன் கலந்துண்ணுமாறு ஆங்கில வைத்தியர்களும் கேட்டுக்கொள்கிறூர்கள். மேடைப் பாடகர்கள் நல்ல குரல் இனிமைக்கு தேனை விரும்பி உண்பர். உடல் மெலிந்தவர்கள் தேனும் பாலும் கலந்துஉண்டால் உடல்பருத்து தேக புஷ்டியுடன் காணப்படுவர். உடல் பருத்தவர்கள் தேனும் நீரும் கலந்துண்டால் உடல் மெலிந்து அழகாக இருப்பர். 'பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்'' இவை நாலும் கலந்து நாவுக்குச் சுவையாக விநாயகருக்கு ஒளவையார் கொடுக்க விரும்பியதாக இலக்கியம் எடுத்துக்காட்டுகிறதல்லவா!

## கௌரவர்களில் கௌரவமானவன்

பாம்புக் கொடியோன் துரியோதனன் முதலிய நூற்றியொருவரும் பாம்பிலும் கொடியோர் என்றே இலக்கியங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நூற்றியோராவது பிள்ளையான விகர்ணன் பாண்டவர் பொருட்டு நீதிக்காகவும் நியாயத்திற்காகவும் கௌரவர்களின் சபையிலே வாதாடிய பெருமையைப் பெற்றவன். கௌரவர்களில் அவன் கௌரவமான பாத்திரமாகவே படைக்கப்பட்டுள்ளான்.

## நேருஜி காண விரும்பிய பாரதம்

காலஞ்சென்ற பாரதப்பிரதமர் ஜவகர்லால்நேரு அவர்கள்ராஜஸ்தான் பிரதேசத்தில் ஒருசுற்றுப் பிரயாணம் செய்தார். அங்கே ஒரு இடத்தில் உள்ளூராட்சி சபைகள் பற்றி உரையாற்றும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

''எதிர்காலத்தில் இந்தியாவில் இருக்கும் 5000பஞ்சாயத்து சமித்திகளும் 5000 பஞ்சாயத்து தலைவர்களுடன் இயங்குமானுல் அந்த 5000 பேரும் 5000 உதவிப் பிரதமர்களாக விருந்து நாட்டிற்கு திரும்படக் கடமையாற்ற முடியும் எனப் பரிபூரணமாக நம்புகிறேன்.

## பட்டத்து ராணி பட்டபாடு

1815ம் ஆண்டு கண்டியைப்பிரித்தானியர் கைப்பற்றியபோது கண்டியின் கடைசி மன்னனை ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனைச் சிறைப்பிடித்தனர். அவனும் அரசகுடும்பத்தினரும் சொல்லொண்ணுத சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டனர். கண்டிய இராசதானியின் பட்டத்துராணியின்காதில்அணிந்திருந்த காதணியைக் கழற்றி எடுக்கப் பிரித்தானியருக்குநேரம் கிடைக்கவில்லை. அதனுல் பிய்த்தெடுத்தனர். அவர்கள் அதனைக் காதோடு பிய்த்தெடுத்தபோது அவள் அணிந்திருந்த மேலாடை முழுவதும் இரத்தக்கறை படிந்த அந்த ஆடை கொழும்பிலுள்ள தொல்பொருட்காட்சிச் சாலையில் இன்றும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதோடு பொதுமக்களின் பார்வைக்கும் வைக்கப்பட்டுள்ளது.

## பண்பாடு


இரசிகமணி டி. கே. சி யின் நூற்றூண்டுவிழா கொண்டாடப்படுகிறது. 'பண்பாடு' என்ற சொல்லை தமிழுக்கு அறிமுகம் செய்து, வைத்தபெருமை அவருக்கேயுரியது.

* கலாபரணி *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்க ரதம் வந்தது வீதியிலே!



**தமிழணங்கே**

கழுத்திலே 'சிந்தாமணி' ஆரத்தையும்
காதிலே குண்டலகேசி அணியினையும்
கைகளில் வளையாபதி காப்பினையும்
இடையில் 'மணிமேகலை' அணியினையும்
காலில் சிலப்பதிகாரத்தையும் அணிந்து

காப்பிய நாயகியாய் என்றும்குன்ரு
இளமையாய் தோன்றுகின்ருள்...
நீங்களும் குன்ருத அழகும் குன்ருத
இளமையுமாய்த் திகழ

## தங்க - வைர நகைகளுக்கு

# ஸ்யாமளா நிகேதனம் நகை மாளிகை

**246 கஸ்தூரியார் வீதி** | **யாழ்ப்பாணம்** | **தொலைபேசி: 7501**

---

## இசையால் வசமாக இதயமெது!

- உங்களை மெய்மறக்கச் செய்யும் கர்னுடக இசை மேதைகளின் கச்சேரிகள்.
- திரைஇசைப் பாடல்கள்
- பக்திப்பாடல்கள்
- தனிப்பாடல்கள்.

அனைத்தையும் நவீன எலெக்ரோனிக் கருவிகள் மூலம் துல்லியமாக ஒலிப்பதிவு செய்து தருவதிலும்
ரேடியோ — ரேப்ரெக்கோடர்கள் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்தையும்
**திருத்தம் செய்வதிலும், விற்பனை செய்வதிலும் முன்னிலையில் நிகழ்பவர்கள்.**

# ரேடியோ ஸ்பதி

**58 கஸ்தூரியார் வீதி,** | **யாழ்ப்பாணம்** | **தொலைபேசி: 7805**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகின் சிகரம்...



நிருபர்: ஓவியக்கலைஞரே உங்கள் கண்களுக்கு அழகானது எது?

கலைஞர்; சலவைக்கல்லில் செதுக்கப்பட்ட சிலையிலும் மில்க்வைற் சலவைப் பவுடரால் சலவை செய்யப்பட்ட சேலைகளே...




**தூய வெண்மையாய்**
**துலங்க வைப்பது**
**மில்க்வைற் சலவைப்பவுடர்**
**மில்க்வைற் சவர்க்காரங்கள்**

தயாரிப்பாளர்கள்

# மில்க்வைற் தொழிலகம்

த பெ இல: 77 தொலைபேசி: 7233 யாழ்ப்பாணம்


பிரதம தபாற் கந்தோரில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது பதிவு இல. பி. கியூ 59/300
● 559, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால்
559, கே. கே. எஸ் வீதியில் உள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org